PUBLIC LIBRARY
JAFFNA

விலை ரூபா 15.00
REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876
இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

16-08-2009 PAATHUKAVALAN

மலர்: 133 இதழ்: 15 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378, Fax 021 2229041, ISSN 1391-7633

# யாழ் ஆயர் வவுனியா இடைத்தங்கல் முகாம்களுக்கு விஜயம்



முகாம்களுக்குள்ளே முடக்கப்பட்டு பலவிதமான நெருக்கீடுகளுக்கு உள்ளாகியிருக்கும் தமிழ் மக்களையும் அவர்களோடு நல்லாயர்களாக வாழும் அருட் பணியாளர்களையும் சந்திக்கும் நோக்குடன் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். வாழ்வே கசந்த நிலையில் வாழும் இவ் முகாம் வாழ் மக்கள் ஆயரின் வரவினாலே ஆறுதலடைந்துள்ளார்கள். குறிப்பாக வவுனியாவிலே அமைந்துள்ள முகாம்களுக்கு விஜயம் செய்த ஆயர் அவர்கள் மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன் அவர்களை விசுவாச வாழ்விலே உறுதிப்படுத்தியுள்ளார். ஆயர் அவர்கள் மடு அன்னை பெருவிழாவின் பின்பு, 16ம் திகதி ஞாயிறு திருப்பலியை முகாமில் வாழும் மக்களுடன் சேர்ந்து ஒப்புக் கொடுக்கவுள்ளார்.



## "கத்தோலிக்க திருச்சபை நீதிமுறையற்ற மதமாற்றத்தில் ஈடுபடாது"

### - புதிய பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை -



கொழும்புக்கான புதிய பேராயராக பதவியேற்றுள்ள மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உள்ளிட்ட உயர் சமூகக் குழமத்தின் மத்தியில் தனது கருத்தினை வெளியிடும்போது ''நீதி முறையற்ற மதமாற்றம் (Unethical Conversions) எமது நோக்கம் அல்ல அதேசமயம், ஒவ்வொருவரும் தாம் விரும்பும் மதத்தைப் பினபற்றவும், அதைத் தொடர்ந்து கைக்கொண்டு பேணவும் அந்த மத நம்பிக்கை தொடர்பான பிரகாரப் பணிகளில் ஈடுபடவும் உரிமை உள்ளவர்கள் என்று நாட்டின் அரசமைப்பே தெளிவாகக் கூறுகின்றது" என தெரிவித்துள்ளார். மதமாற்ற சர்ச்சைகள் தலைதூக்கியுள்ள இவ்வேளையிலே புதிய பேராயரின் இக்கருத்தானது பலதரப்பினராலும் வரவேற்கப்பட்டுள்ளது. மதமாற்றத்தின் பல்வேறு முகங்களை தனது உரையிலே தெளிவு படுத்திய பேராயர் அவர்கள் மதமாற்றத்தினை மதத்திணிப்புக்களில் இருந்து தெளிவாக வேறுபடுத்திக் காட்டியமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## அகதிகளின் நலன்களுக்காக பாப்பரசர் விசேட பிரார்த்தனை



உலகில் உள்ள அகதிகளின் நலனை முன்னிலைப்படுத்தி பாப்பரசர் விசேட பிரார்த்தனைகளில் ஈடுபட உள்ளனர் என்று வத்திக்கானிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகில் உள்ள அகதிகளின் நலனை முன்னிலைப்படுத்தி விசேட பிரார்த்தனைகளில் ஈடுபட முன்வருமாறு அவர் கத்தோலிக்க சமூகம் முழுவதுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த ஓகஸ்ட் மாதத்துக்கான பிரார்த்தனைகளை அகதிகள் சார்பாக மேற்கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார். உலகில் 4 கோடி மக்கள் அகதிகளாக வாழ்கிறார்கள். இலங்கை, பாக்கிஸ்தான், பிலிப்பைன்ஸ், போன்ற ஆசிய நாடுகளில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் உள்நாட்டு பிரச்சினைகளால் இடம் பெயர்ந்து அகதிகளாக அவதிப்படுகின்றனர்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளும், அரச படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலை அடுத்து, பல்லாயிரக்கணக்கான மக்கள் இலங்கையில் உள்நாட்டு அகதிகளாக உள்ளனர். இவர்கள் அனைவரதும் நலனை முன்னிலைப் படுத்தி பிரார்த்தனைகளில் ஈடுபட வருமாறு பாப்பரசர் கோரியுள்ளார். அதே நேரம் உலகலாவிய ரீதியில் கத்தோலிக்கர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகளுக்கு எதிராக பிரார்த்திக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

## உயர்கல்விக்காக அருட்தந்தை ரவிராஜ்

உயர்கல்விக்காக அருட்தந்தை ரவிராஜ் அடிகள் உரோமாபுரி செல்லுகின்றார். இவர் யாழ் பேராலயத்திலும் கிளி/முல்லை மறைக்கோட்ட தர்மபுரம் பங்கின் பங்குத்தந்தையாகவும் வன்னி இடப்பெயர்வின் போது மக்களுக்காக நிறைந்த பணியாற்றி, உயர் கல்விக்காக இவ்வருடம் உரோமாபுரி செல்லுகின்றார். இவர் மேற்கொள்ள இருக்கும் உயர் கல்விக்கு பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் செபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.




## பிரான்ஸ் இலங்கை தமிழ் கத்தோலிக்க பணியை புதிய இயக்குனர் பணியேற்பு

பிரான்ஸ் இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் புதிய இயக்குனராக அருட்பணியாளர் லீனஸ்சொய்சா அமதி அடிகளார் ஆவணித்திங்கள் 22ம் நாள் பணியேற்கவுள்ளார். அடிகளாரின் பணி வாழ்வு சிறக்க பாதுகாவலன் வாழ்த்தி நிற்கின்றது. அதேவேளையில் இதுவரையில் பணியகத்தின் இயக்குனராக சிறப்பான முறையில் பணியாற்றிய அருட்பணியாளர் அருள்ராஜ் அமலதாஸ் அமதி அடிகளார் மாற்றலாகிச் செல்கின்றார். அடிகளாரின் பணி சிறக்கவும் இறைவனை வேண்டுவோம். அடிகளாரின் பணிக்காலத்திலே பல விதமான அருட்பணிகள் நெறிப்படுத்தப்பட்டு சிறப்பாக செயற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- நன்றி உறவுகள் -

## காலம் சென்ற யாழ் ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் அறக்கொடை பேருரை - 2009



மேற்படி பேருரை யாழ் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வருடாவருடம் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டிற்கான பேருரை ''தலைமைத்துவம் - 21ம் ஆண்டை நோக்கி - ஓர் உளவள ஆன்மீகக் கண்ணோட்டம்.''என்கின்ற மையப்பொருளில் அருட்பணி. சா.ம. செல்வரெட்ணம் அ.ம.தி அவர்களால் வழங்கப்படவுள்ளது. இவ்நிகழ்வு 24.08.2009 ஆம் ஆண்டுதிங்கட்கிழமை அன்று பாதுகாவலன் மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்வுரையில் பங்குபற்றி பயன் பெற ஆர்வமுள்ள அனைவரையும் ஏற்பாட்டாளர்கள் அழைத்து நிற்கின்றனர்.

## கைதடி இடம்பெயர்ந்தோர் முகாமில் புதிய ஆலயம் யாழ் மறைமாவட்ட நிதி முகாமையாளர் திறந்து வைத்தார்

நடந்து முடிந்த கொடிய போரின் விளைவாக பல்வேறு இன்னல்கள் உயிராபத்துக்களின் மத்தியில் இடம்பெயந்து கைதடி பனைவள ஆய்வு நிலையத்தில் அமைந்துள்ள இடம் பெயர்ந்தோர் முகாமில் தஞ்சம் புகுந்துள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்த கத்தோலிக்க மக்களின் திருவழிபாட்டுக்கென கடந்த 02.08.2009 ஞாயிறு காலை புதிய தற்காலிக ஆலயம் திறந்து வைக்கப்பட்டது. யாழ் மறைமாவட்ட ஆயரின் பணிப்புரையின் பேரில் அமைக்கப்பட்ட தற்காலிக ஆலயமானது யாழ் மறைமாவட்ட நிதிமுகாமையாளர் அருட்பணி அன்ரனிதாஸ் அடிகளாரால் ஆசீர்வதித்து திருவழிபாட்டுக் கென திறந்து வைக்கப்பட்டது. அன்றைய

(8ம் பக்கம் பார்க்க...)

## அருட்தந்தை பி. யேசுநேசன் அ.ம.தி அடிகளார் இறைவனடி சேர்ந்தார்



முன்னைநாள் அமல மரித்தியாகிகள் யாழ் மாகாண முதல்வராகவும் டிமசனொட் இறையியலக அதிபராகவும் பணி புரிந்த அருட்தந்தை P. யேசுநேசன் அடிகளார் ஆவணி 13ம் திகதி இரவு இறைவனடி சேர்ந்தார். இவரின் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற எமது செபங்களை காணிக்கையாக்குகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவிய்ணையெயில் கவலர்கள் விழித்திருப்பது வீணாகும்



## தாய் வீடு

...."அரவின் வாய்த் தேரைபோல அலறுகின்றேனே. அம்பு தைத்த மான் போல் துடிக்கின்றேனே அன்னை இல்லாப் பிள்ளை போல் அழுகின்றேனே அம்மா தாயே...." இந்த வார்த்தைகளைக் கேட்க ஏதோ ஒன்று எம் உள்ளத்தை உடைத்து உருகுவதுபோல் ஓர் உணர்வு உயிர் பெறுகிறது இல்லையா? உடம்பு புல்லரிக்க, நாத்தழுதழுக்க, கண்ணீர் மெல்லக் கசிய.... அன்னை வீடு விட்டு புறப்படும் பிள்ளையின் உணர்வுகளோடு, மருதமடு அன்னையின் முற்றத்தில் முழந்தாளிட்டு முனகிய அந்த இறுதி யாத்திரைச் செபம் உங்கள் உள்ளத்தில் ஒருமுறை வந்து போயிருக்கும்.

தனித்துவமும், பழமையும், பெருமையும் வாய்ந்த யாத்திரைத் தலங்களிலே தலைசிறந்து விளங்கும் அன்னையின் பதியே மருதமடு யாத்திரைத் தலம் என்பதில் சந்தேகத்திற்குச் சற்றும் இடமில்லை. கரடி, புலி வாழும் காட்டிதுள்ளே வந்திருந்து அன்னையென அன்பை அள்ளிச் சொரிந்து, அற்புதங்கள், புதுமைகள் பல புரிந்து அற்புதத்தீவாய் தன்னை அலங்கரித்து நிற்கும் மருதமடுத் திருத்தலம் எப்போதும் எமக்கு தாய் வீடு.

அன்னை மரியாள் பற்றி ஆயிரம் தப்பறைகள் அப்பப்போ எனாமினாய் சுழன்றடித்தாலும் அன்னையின் பக்தி பன்மடங்கு பெருகி தழைக்கின்றது. காரணம், வரலாற்றுப் பக்கங்களிலே வரையப்பட்டிருக்கும் அன்னையைப் பற்றிய உறுதியான கருத்துக்களும், காலத்தின் முகத்தில், மனித வரலாற்றில் மண்ணோடு வேராக ஒன்றிக் கலந்துவிட்ட "அம்மா" என்ற இன்ப ஊற்றின் முக்கியத்துவமே ஆகும்.

தாய் மடி, தாய்வீடு என்ற வார்த்தைகள் அறிவைக் கடந்த உணர்வு என்ற வலையில் அகப்பட்டுள்ள வார்த்தைகள் அன்னை மரியாளின் ஆலயங்கள் நோக்கிய பாதச்சுவடுகளும் படிப்பிப்பது இதே யாத்திரீக உணர்வைத்தான்.

யாத்திரைத்தலங்கள் பொழுது போக்கு இடமாக விடுமுறைச் சுற்றுலாப் பார்வைத்திடலாக, சில காதல் சோடிகளின் மரத்தடிப் பூங்காவாக உருவெடுப்பதை தடுப்பதற்கு ஒரே வழி "திருடனாய்ப் பார்த்து திருந்த வேண்டும்".

அன்றும் அன்னை மரியா எலிசபேத் அம்மாளை நோக்கி யாத்திரை சென்றாள். தாழ்நிலையிலே நின்ற அடியவர்களுக்கு இறைவன் காட்டிய மாபெரும் கருணையையும், அருட்பொழிவினையும் நினைவுற்று ஆண்டவரில் அகமகிழ மரியாள் யாத்திரை சென்றாள். முதிர்ந்த வயதிலே கருத்தாங்கிய எலிசபேத் அம்மாளுடன் இணைந்து அவளுக்கு துணைபுரிய, உதவியளிக்க அன்று அன்னை மரியா ஓடிச் சென்றாள். 'யாத்திரை என்பது ஓர் ஆன்மீகப் பயணம். விண்ணக வீடு நோக்கிய எம் அனைவரின் யாத்திரைக்கும் இத்தகைய யாத்திரைப் பயணங்கள் ஓர் முன்னோடியாகவும், முன்சுவையாகவும் இருக்கின்றன. தாய் வீடு நோக்கிய ஏக்கமும், ஆர்வமும் எமக்கு எப்போதும் தேவை. எனவே எம் ஆன்மீக தாய்வீட்டிற்கான ஏக்கமும், யாத்திரையும், எம் தூய விண்ணக தாய்வீட்டிற்கான ஏக்கத்தையும் ஆர்வத்தையும் புனிதப்படுத்துவதாக அமைவதாகும்.

யாத்திரை செல்லும் மக்கள் ஏதோ சென்றோம் வந்தோம் என்று இராது உணர்வுடன் கலந்த பக்தியை வாழ்வில் வளர்க்க வேண்டும். அன்று அன்னை மரியாள் செய்தது போல உள்ளத்தில் இருத்திச் சிந்தித்து உண்மையான மாற்றம் காண வேண்டும். யாத்திரைத்தலங்கள் எப்போதும் வாழ்விற்கு புத்துணர்ச்சியும் புதுவேகமும் வாழ்விற்கான புதிய நம்பிக்கையையும் அளிக்கும் தாய்வீடு.

அருட்பணி. சாள்ஸ் கொலின்ஸ்

## வாசகர் கருத்து



### S.M. சரன்ஸ். இளவாலை

125 ஆண்டு மேலாக விசுவாசத்தின் காவலனாக செயற்படும் பாதுகாவலனின் பணிக்கு எனது பாராட்டுக்கள். புதிய ஆசிரியரின் பணிசிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

### ரீ.வி. தீபனா. சக்கோட்டை.

நெடுந்தீவு முகிலன் போன்ற ஆற்றல் உள்ளவர்களை இனம்கண்டு வாசகர்களை கவரும் பாதுகாவலனே உமக்கு எம் நிறைவான வாழ்த்துக்கள்.

### க. செபமாலை

பிரமாண்டமான ஆலயக்கொண்டாட்டங்கள் எம் ஆன்மீக வாழ்விலே மாற்றங்களை கொண்டுவரவில்லை. எமது விசுவாச வாழ்வினை ஆழப்படுத்துகின்ற விதத்தில் இவைகள் நெறிப்படுத் தப்பட வேண்டும்.

### S.J. குமாரவேல். நல்லூர்

கத்தோலிக்க திருச்சபை பலவித நெருக்கடிகளை சந்திக்கும் இவ்வேளையில் விசுவாசிகளை இறை விசுவாசத்தில் ஆழப் படுத்துவதற்கு பதிலாக திரைப்பட திரனாய்வு போன்ற அம்சங்கள் பாதுகாவலனுக்கு தேவைதானா?

# வள(னா)ர் பப்பா பதில்கள்



1. கேள்வி :- அன்புள்ள வளனாரே, இவ் ஆண்டு குருக்கள் ஆண்டாகத் திருத்தந்தை பிரகடனம் செய்துள்ளதன் பொருள் என்ன?

அமலதாசன், கச்சேரியடி.

பதில் :- குருக்கள் ஆண்டு என்பது பணிக்குருத்துவத்தில் பங்கெடுக்கும் குருக்கள், தம் வாழ்வையும் பணியையும் சீர்தூக்கிப்பார்ப்பதும், இறைமக்கள் தம் குருக்களுக்காகச் சிறப்பான முறையில் செபிப்பதும் இறையழைத்தலை ஊக்குவிப்பதுமாகும்.

2 கேள்வி :- வளனாரே, இறையழைத்தலுக்கு முன்வர இக்காலப் பிள்ளைகள் பின்னிற்கிறார்களே! என்ன காரணம்?

சுமதி, கொய்யாத்தோட்டம்.

பதில் :- எதற்கு முன்னிற்கிறார்களோ, அதுவே காரணம். ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் ஆன்மாவை இழப்பாரெனில் பயனென்ன? என்ற தூய லொயோலா இஞ்ஞாசியாரின் வார்த்தைகளை நினைவில் கொள்வது நல்லது. பரிசுத்தமான இறை ஊழியர்கள் இவ்வுலகிற்கு ஓர் அவசர தேவை. துடிப்புள்ள இளையவர்கள் முன் வருவார்களா?

3. கேள்வி :- வளனாரே, பரீட்சைகள் தொடங்கவிருக்கும் இந்த வாரத்தில் பிரசார சத்தங்கள் மாணவர் எமது கல்வியைக் குழப்புகிறதே?

கவிஞன், யாழ்.

பதில் :- முதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர் இதன் பாதிப்பை உணர்ந்து கொள்ள வேண்டும். இரண்டாவது, புறச்சூழல் எதுவாக இருந்தாலும் நீர் படிக்க வேண்டுமென்ற உறுதியிருந்தால் எதுவும் உம்மைக் குழப்ப முடியாது. மூன்றாவது பரீட்சை காலத்தில் மட்டும் தான் படிப்பது என்ற உமது கொள்கையை நீர் மறுபரிசீலனை செய்வது நல்லது.

4. கேள்வி :- பப்பாவுக்கு, தடுப்பு முகாம்களில் வாழும் மக்களுக்கு விடுதலை எப்போது?

சதீஸ்குமார், நாவாந்துறை.

பதில் :- தமிழ் மக்களை பொறுத்தவரை விடுதலை என்று ஒன்றில்லை தானே. முகாமில் இருந்து எப்போது வெளிவருவர் என்று கேளும். சரி எப்போது முகாமிலிருந்து வெளியே வருவர் அவர்கள் விடும்போது வருவார்கள். அவர்கள் எப்போது விடுவார்கள்? இவர்கள் வரும்போது விடுவார்கள். (இதுதான் தெளிவான குழப்பமா?)

5. கேள்வி :- வளனாரே, கத்தோலிக்க ஆசிரியர்கள் சிலர் தாம் கல்வி கற்பிக்கும் பாடசாலைகளில், கத்தோலிக்க சமய பாடம் கற்பிக்கப் பின்வாங்குகிறார்களாமே?

சுபா, மிருசுவில்.

பதில் :- இறை ஞானத்தை விட, உலக ஞானத்தில் தான் அவர்கள் அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர் போலும். "என் பொருட்டும் என் வார்த்தைகளின் பொருட்டும் வெட்கப்படும் எவரை முன்னிட்டும், உலக முடிவில் ஆண்டவரும் வெட்கப்படுவார் என்கிறது நற்செய்தி (அதாவது இவர்களுக்கு மறுவுலகில், சம்பளமோ, பென்சனோ, EPF எதுவும் கிடையாது என்று அர்த்தம்)

6. கேள்வி :- அன்புடன் வளனாருக்கு, திருப்பலியில் புதிய பாடல்களா, பழைய பாடல்களா பாடுவதற்குச் சிறந்தது?

அமல நாயகி, நெடுந்தீவு.

பதில் :- (இதற்கு வியோனியை கூப்பிட்டு பட்டிமன்றம் நடத்துவது தான் சிறந்தது) முதலில் எல்லோரும் பாடக்கூடிய அர்த்தமுள்ள பாடல்களே சிறந்தது. அவை புதிய பாடல்களாக கூட அமையலாம். பாடகர் குழு; இறைமக்கள் செபிக்கத் தூண்டுவதையே அடிப்படை நோக்கமாக கொண்டுள்ளதால், அதற்கேற்பவே பாடல்களை தெரிவு செய்ய வேண்டும்.

(இன்னிசை கானங்கள் என்ற நிலை வேண்டாம்)

7. கேள்வி :- வளனாருக்கு, திருப்பலியில் மறையுரை நேரத்தில் ஆலயத்துக்கு வெளியே சென்று பின் வந்து இணைந்து கொள்வோர் பற்றி என்ன நினைக்கிறீர்?

சிபோ, குருநகர்.

பதில் :- திருப்பலியில் மறையுரை மிக முக்கியமான பகுதி. இறைவன் மனித வார்த்தைகளில், காலத்தின் குறிகளோடு பேசும் நேரம். சிலர் அதைப் புரிந்து கொள்ளாது, மறையுரை நேரத்தில் ஒரு இடைவேளை (Interval) எடுத்துத் தேனீர் அருந்தி, கூடி நின்று பேசி, hand phoneல் கதைத்து, கடையில் பொருட்கள் வாங்கி வீட்டில் வைத்து விட்டு வரும் ஒரு shot commercial break நேரமாக கருதி செயற்படுவது கவலைக்குரிய ஒன்றே.

8. கேள்வி :- பப்பாவுக்கு, இப்போது பல ஆலயங்களில் திருப்பலி நேரத்தில் மக்கள் பதில் சொல்வதில் ஆர்வம் காட்டாது மௌனிகளாக இருக்கிறார்களே

ஞானம், யாழ்.

பதில் :- வாழ்க்கையில் நடப்பவை பலவற்றிற்கு பதில் தெரியாததால், திருப்பலியிலும் பதில் சொல்ல தெரியாது இருக்கிறார்கள் போலும் திருப்பலியில் ஈடுபாட்டு மனநிலையுடன் கலந்து கொண்டால், வாழ்க்கைப் பலியும் அர்த்தமுள்ளதாக அமையுமே (**வீட்டைக் கலைந்து விடுமென்று சின் வாய் திறப்பதில்லையாமே? ஆண்களுக்கு ஏதுங்க லீவ் ரிக்**)

9. கேள்வி :- வளனாரே, பூசையில் பரலோக மந்திரம் சொல்லும் போது ஏன் கைகளை விரித்து, மேலே பார்த்துச் சொல்ல வேண்டும்? கண்களை மூடிச் செபித்தால் போதாதா?

சுரேஷ், சக்கோட்டை.

பதில் :- கைகளை விரித்தல், மேலே பார்த்தல் என்பது எல்லாம் ஒரு அடையாளம் மட்டுமே. அடையாளங்கள் வழிபாட்டை அர்த்தமுள்ளதாக்குகிறது. என்பதால் அதை செய்வதில் தவறில்லை. ஆனால் கண்களால் மேலே பார்த்துக் கொண்டு, மனம் வேறெங்கோ பார்த்தால் அதிலும் அர்த்தமில்லை. அதற்கு கண்களை மூடி ஒரு மனதாய் செபிப்பதே சிறந்தது. எது எப்படியோ செபத்தை உணர்ந்து சொன்னால் சரிதான். (மேலே பார்த்து செபித்தால் கோவில் கூரையிலுள்ள தூசிகள், சிலந்தி வலைகளை தட்டிச் சுத்தம் செய்ய வேண்டுமென்ற உணர்வும் உமக்கு வருமே)

10. கேள்வி :- அன்புள்ள வளனாரே, நடைபெற்ற தேர்தலில், நீர் எந்தப் பக்கம்?

அரியநேசன், இளவாலை.

பதில் :- நடுப்பக்கம் (ஹி ஹி ஹி என்னை மாட்டப்பாக்கிறீரா?)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## உறவைத் தேடி

இரை தேடும் பறவைகளாய்
உறவைத் தேடி நாமிங்கு
துலைக்கப்பட்ட துண்டுகளாய்
பாதி உறவை இழந்து வந்தோம்
தொலைந்து போன நடைபதனால்
மீதிப்புறவும் மறவையும் வேகமா
எம் வயிற்றுப் பசிக்குத்தம்
பட்டினியிலே உணவாய்மாற
கட்டை கந்தையும் இன்றி
கதறி அழ நாதியும் இன்றி
பாதைகளாம் எம் மனங்கள்
பாவப்பட்ட தமிழ் இனங்கள்
இரங்கும் தேவா எம்மீது
இறங்கி வாரும் மண்மீது

S. டயானா
அச்சுவேலி.

## நம்பிக்கை

உறுதி என்பது உள்ளம்
அந்த உறுதியை - இழந்தவன்
உடலில் உயிர் தங்குவதில்லை - தோழா
நம்பிக்கை என்பது இழந்துவிட்டால்
வீசுகின்ற காற்றை என்ன?
ஐம் பூதங்களையும் அடைந்துவிடலாமே

கனவுகள் நிஜமாகலாம் நிஜங்களினால்
உன் பார்வையில் அது - உறுதியில்
வீரர் நம்பிக்கை தானடா
நம்பிக்கை ஒரு நாளும் தோற்றதில்லை
இதை உணராதவன் - வாழ்வில்
ஜெயித்ததில்லை.

ஜா. ஜெஜிசீ
A/L 2010 Arts
யாழ்/ திருக்குடும்ப கன்னியர் மடம்

## மனித வாழ்வு

மனித வாழ்வை அனுபவித்த
மனித ஜீவன்
உலகினை விட்டு விலகியது
இளம் வாழ்வில்
இணையவில்லை
உறவுகளை உணர்ந்துவிட்டு
கடவுளை உணரவில்லை
உலக வாழ்வே நிஜமென
நிலைபெற்றுச் சிரிக்கிறது
அவனைத் தொலைத்து விட்டு
தன் நிம்மதியையும்
தொலைத்து விட்டது.

## எனக்கேது வயது...?

கருவறையின் கருவினிலே
கருத்தரிக்கும் போது
கருக்கட்டிவிடும் கேட்டல் எனும்
முளைவித்து
அப்போது எனக்கேது வயது?

மழலையாய் மண்ணின்
மடியில் தவழும் போது
மார்பின் பாலுடன்
மனதில் படிந்துவிடும்
மௌனம் என்னும் வாசிப்பு
அப்போது எனக்கேது வயது?

மனிதன் பூரணத்துவம்
வாசிப்பில் உள்ளதென்பது
உங்களுக்குத் தெரியாதா?
ஆண்டுகள் கோடியானாலும்
அழியாச் சொத்தாக
எழுத்தில் வரும் எனக்கேது வயது?

மானிட வாழ்க்கையெல்லாம்
ஒரு நொடியில் மாறிவிடும்
யுகங்களின் இரகசியத்தை
இரசனையுடன் இயம்பிடும்
வரலாறு நாயகன் நான் தானே
எனக்கேது வயது?

எனவே மனிதனே!
கருவறையில் - நல்ல
மழலையிலே - உடன்
குழந்தை வயதில் - எழில்
வாலிபம் வயதில் - கருணை
தாய் வயதில் - அன்பு
பாட்டன் வயதில்
என்றும், எங்கும் எப்போதும்
எனக்குள்ளும் உங்களுடன்
இருக்கும் என்கு
தயவு செய்து
வயது மட்டும் கணிக்காதீர்.

அ. நாஜி, யூலனூர், அச்செழு.

# மண்ணகப் பூ ஒன்று விண்ணிலே விரிகின்றது

இறையியல் பேராசிரியர் தே. அல்போன்ஸ்
தூய பவுல் கல்லூரி, திருச்சி.

இக்கோட்பாடு விவிலிய அடிப்படை அற்றது. நான்காம் நூற்றாண்டுகளிலிருந்து தொடர்ந்து தோன்றி வளர்ந்த புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டது; இயேசுவுக்கு இணையாக மரியாவை உயர்த்தும் கத்தோலிக்க சபைக்கு வழக்கமான மிகையான மரியா வணக்கத்தின் இன்னொரு வெளிப்பாடு என்பவைதான் சீர்திருத்த சபையினரின் முக்கிய விமர்சனங்கள். கத்தோலிக்க இறையியலார் சிலரது மகிழ்ச்சியின்மைக்கு காரணம் ஏற்கனவே கத்தோலிக்க சபையில் மிகைப்பட்டு இருந்த மரியா பக்தியை அது இன்னும் அதிகமாக்கிவிடுமோ, அரும்பிக் கொண்டிருந்த கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகளுக்கு அது தடையாகிவிடுமோ எனும் அச்சம்தான்.

எனினும் எவரும் எதிர்பாராத ஒரு வட்டாரத்திலிருந்து இக்கோட்பாட்டு அறிவிப்புக்கு வந்த வரவேற்பு பலருக்கு வியப்பளித்தது. அது அன்று உலகப்புகழ் பெற்றிருந்த உளவியல் அறிஞர் கார்ல் யுங் இதனைப் புகழ்ந்து பேசியதுதான். அவர் இவ்வறிக்கையைப் பெண்மைக்கு சேர்க்கப்பட்ட ஒரு பெரும் சிறப்பாக, பெருமையாகக் கருதினார். சமூகத்திலே தாழ்த்தப்பட்டு கிடக்கும் பெண்களின் உயர்வுக்கும், மாந்தர் தம் இயலபிலே விட்டிருக்கும் பெண்மைப் பரிமாணத்தை மீண்டும் வளர்த்தெடுத்து தாங்கள் முழுமை காணுவதற்கும் இந்தக் கோட்பாடு ஒரு தூண்டுதலாக இருக்கும் என்பது அவரது எண்ணமும் எதிர்நோக்கும். ஆம், மரியாவின் விண்ணேற்பு என்பது பெண்மைக்கு மட்டும் அல்ல, மானிடம் முழுவதற்குமே ஒரு பெரும் மகிமை. விண்ணில் பூத்த மண்மலர் மரியா. அவர் இறை ஒன்றிப்பில் மனிதத்தின் நிறைவை எய்தியது நாம் அடையவேண்டிய உயர்வுக்கு ஓர் அழைப்பு அடையாளமாக நிறைவுக்கு ஓர் முன்னறிவிப்பு. எனவே இக்கோட்பாட்டின் ஆரம்பங்கள், இன்றைய அர்த்தங்கள் பற்றி தொடர்ந்து காண்போம்.

### ஊகத்திலிருந்து உறுதிப்பாட்டிற்கு

மரியாவின் விண்ணேற்பு பற்றி விவிலிய நூல் எதுவும் வெளிப்படையாகப் பேசவில்லை. அதற்குச் சான்றாக வழக்கமாக எடுத்தாளப்படுவதும், வழிபாட்டில் வாசிக்கப்படுவதும் திருவெளிப்பாடு நூல் 12:1-6 எனும் பகுதியே. "வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது: பெண் ஒருவர் காணப்பட்டார்..." எனத் தொடங்கும் அப்பகுதி குறிப்பது, அன்று துன்புறுத்தப்பட்டாலும் பின்பு மாட்சியடையும் என யோவான் உறுதியளித்து, ஊக்கப்படுத்த முயன்ற தொடக்கத் திருச்சபையையே என்பது விவிலிய அறிஞர்களின் விளக்கம். இப்பகுதி மரியாவைக் குறிப்பது எனும் தவறாகப் புரிதலும் நான்காம் நூற்றாண்டில் தொடங்கி ஏழாம் நூற்றாண்டு வரையில் வளர்ந்த மரியா பற்றிய பல புராணக் கதைகளிலும் இருந்து தான் மரியாவின் விண்ணேற்பு பற்றிய நம்பிக்கை வளர்ந்துள்ளது என்பது சீர்திருத்த சபை அறிஞர்கள் பலரது குற்றச்சாட்டு.

மேற்கூறிய விவிலியப் பகுதி தொடக்கத் திருச்சபையைக் குறிப்பது என்பதில் கேள்விக்கு இடமில்லை. இருப்பினும் அடையாளங்கள் என்றாலே இயல்பாகவே அவற்றில் அர்த்த ஆழங்கள் பல உண்டு. எனவே, 'வானில் தோன்றிய அடையாளம்' எனும் இரண்டாம் நிலைக் குறிப்பீடாக மரியா விளங்குகிறாரா என நாம் தேட முயலலாம். இயேசுவைப் பெற்றெடுத்து, அவரைக் கொல்லத் தேடிய அரக்கன் ஏரோதிடமிருந்து அவரைக் காக்க பாலைநிலத்தைக் கடந்து சென்று, இறுதியாக விண்ணக மாட்சியடைந்த மரியாவை இப்பகுதி அன்றைய வாசகர்கள் பலருக்கு இயல்பாகவே நினைவூட்டிக் கொண்டு இருந்திருக்கவேண்டும். துன்புறுத்தப்பட்ட தொடக்கக் கிறிஸ்தவர்களுக்கு அவர்களைப்போல் துன்புறுத்தப்பட்டு மாட்சிமை அடைந்த மரியாவை மாதிரியாகக் காட்டி ஊக்கம் தருவது ஆசிரியரின் தெளிவான நோக்கமாகக் கூட இருந்திருக்கலாம்.

இறையியல் அடிப்படையிலும் இப்பகுதியில் மரியாவைப் பற்றிய குறிப்பு மறைமுகமாவதாவது இருக்கிறது என நாம் கருதலாம். ஏனெனில், இயேசுவின் தலைசிறந்த நம்பிக்கையாளர் எனும் வகையில் மரியா திருச்சபையின் முதலும் முன்மாதிரியுமான உறுப்பினர். எனவே திருச்சபை விண்ணக மகிமையை அடைகிறது என்றால் இயேசுவுக்கு அடுத்து முதன்முதலில் அது மரியாவுக்கே பொருந்தும். மரியாவிலும் மரியா வழியாகவும்தான் முதன் முதலிலும் முழுமையாகவும் மானிடத் திருச்சபை விண்ணக மாட்சியை அடைகிறது எனலாம்.

வரலாற்றுக் கண்ணோக்கில் பார்க்கும் போது, மரியா எங்கு, எப்போது, இறந்தார் என்பது பற்றிய செய்திகள் நமக்கு உறுதியாக தெரியாது. இயேசுவின் உயிர்ப்புக்குப் பின்பு அவர் எருசலேமிலேயே தங்கி அங்கேயே இறந்தார் எனக் கூறும் மரபுகள் உண்டு. அங்குள்ள 'துயிலும் மரியாவின்' கோயிலை அதற்குச் சான்றாகக் காட்டுவோரும் உள்ளனர். இயேசுவின் விண்ணேற்றத்திற்கு பின்பு அவர் திருத்தூதர் யோவானுடன் எபேசுக்குச் சென்று தங்கினார்; பல ஆண்டுகளுக்குப் பின்பு அங்கேதான் உயிர் நீத்தார் எனக் கூறும் மரபுகளும் உண்டு. எது உண்மையானது என உறுதிப்பட நாம் கூற இயலாது.

வரலாற்றுத் தகவல்கள் இல்லாத இந்நிலையில் நான்காம் நூற்றாண்டில் இருந்தே மரியாவின் இறப்பு பற்றிய பல? புராணங்கள் தோன்றத் தொடங்கின. அவற்றுள் ஒன்று பின்வருமாறு: மரியா முதுமை எய்தி உயிர் துறக்கும் நிலையில் உள்ளார் எனும் செய்தி அறிந்து திருத்தூதர் அனைவரும் எருசலேமுக்கு வந்தனர். அவர்களிடம் பிரியாவிடை பெற்று அவர் அமைதியாக இறைவனில் துயில் கொண்டார்; அவரை நல்லடக்கம் செய்து துயரில் சீடர்கள் மூழ்கியிருக்க மூன்று நாள்கள் காலம் தாழ்த்தி வந்த திருத்தூதர் தோமையார் கடைசியாக ஒரு முறையாவது மரியாவின் முகத்தை பார்த்தே ஆகவேண்டும் எனப் பிடிவாதம் செய்ய, அவருக்குக் கல்லறையைத் திறந்து காட்டியபோது அங்கே மரியாவின் உடல் இல்லை. மாறாக, புத்தம்புது நறுமண மலர்களே அங்கு இருந்தன. இதிலிருந்து மரியா விண்ணேற்பு அடைந்தார் எனத் திருத்தூதர்கள் நம்பத் தொடங்கினர்.

இது புராணம் அல்லது பக்தி புனைவு என்பதால் உண்மையே இதில் இல்லை என நாம் விட்டுவிடலாமா எனும் கேள்வி இங்கு எழுகிறது. நம்பிக்கை என்பதே உறுதியான ஊக்கம்தான். முழு ஆதாரங்களோ தெளிவான வரலாற்றுச் சான்றுகளோ இருந்தால் அது அறிவியல் உண்மையே அன்றி சமய நம்பிக்கை அல்ல. சமய நம்பிக்கைகள் இயல்பாகவே அறியாதவை, தெரியாதவை பற்றி ஊக்கம் செய்து அறிந்து கொள்ளத் தூண்டுபவை. பக்தி சார்ந்த கற்பனைகள், ஊகங்கள் இன்றி சமய உண்மைகளுக்கு வளர்ச்சி இல்லை. அவை இல்லாத சமய நம்பிக்கைகள் வரட்டு உண்மைகளாகவும் மனிதரை முழுமையாக ஈடுபடுத்தும் ஆற்றல் இல்லாத வெறும் அறிவுசார்ந்த மெய்மைகளாகவும் இருந்துவிடக்கூடிய ஆபத்தும் உண்டு.

மேலும் தூய ஆவியால் இயக்கப்படும் உயிருள்ள இயக்கமாகிய திருச்சபை அவர் வெளிப்படும் புதுப்புது உண்மைகளை நம்பிக்கை சார்ந்த ஊகத்தால்தான். பக்தி கற்பனைகளால்தான் கண்டறிய முடியும் இயேசுவே இதனை நமக்கு எடுத்துக் கூறியுள்ளார். "நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது. உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" (யோவா 16: 12-13). எனினும், அத்தகைய ஊகங்களும் கற்பனைகளும் ஏனைய உண்மைகளோடு ஒத்துச் செல்கின்றனவா, இன்றைய நம் வாழ்வுக்கு நலமான அர்த்தங்களைச் சொல்லுகின்றனவா என்பதையே அவை உண்மையா இல்லையா என நாம் கண்டறிய உதவும் உரைகற்கள் அல்லது அளவுகோல்கள்.



# யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகம் அங்குரார்ப்பணம்

யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் 19.07.2009 அன்று கத்தோலிக்க பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. இ.ம.வி. இரவிச்சந்திரன் தலைமையில் ஆரம்ப செபத்தோடும் இறைவார்த்தைப் பகிர்வோடும் பொதுநிலையினர் கழக மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு ஒவ்வொரு மறைக்கோட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழக செயற்குழு உறுப்பினர்கள், மறைமாவட்ட பக்திச்சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் கத்தோலிக்க பொதுநிலை வாண்மையாளர் குழு உறுப்பினர்கள் ஆகியோரோடு இளவாலை மறைக்கோட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழக இயக்குனர் அருட்பணி. யூட் அமலதாஸ் அடிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கூட்டத்திற்கு வருகை தந்தோரின் அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து அருட்பணி. இரவிச்சந்திரன் அடிகள் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழகத்தை ஆரம்பிக்கும் இந்நாள் மிகவும் முக்கியமானது என்று கூறி அனைவரையும் அன்போடும் மகிழ்வோடும் வரவேற்றார். பொதுநிலையினரின் திருச்சபை சார்ந்த அழைத்தல் திருமுழுக்கில் இருந்து ஆரம்பமாகின்றது என்றும் அவ்வழைத்தலை பிரமாணிக்கமாக இருக்க ஆவியின் துணை எமக்கு வேண்டும் என்று கூறி பின்வரும் பணிகளை ஆற்ற அனைவரையும் அழைத்து நின்றார்.

1. திருச்சபையில் 99 வீதமாக இருக்கும் பொதுநிலையினர் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் பங்களிப்பை அதிகரித்தல்

2. பொதுநிலையினருக்கும் திருநிலையினருக்கும் இடையேயான உறவை சீர்செய்து உறவுகளை ஆழப்படுத்தல்.

3. அரச சமூக பொருளாதாரம் போன்ற வெவ்வேறு தளங்களில் அர்ப்பணிப்போடு உழைத்து இயேசுவுக்கு சான்று பகர்தல்.

4. யாழ் மறைமாவட்ட யாழ் மறைக்கோட்ட பங்கு அருட்பணிச் சபை போன்ற அமைப்புக்களை உருவாக்கி அவதானங்களை மேற்கொள்ளல்

தொடர்ந்து மறைமாவட்ட செயற்குழு பற்றி கலந்துரையாடப்பட்டது. செயற்குழுவுக்கு இளம் மற்றும் புதியவர்களை இணைப்பதோடு தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற பதவிகளுக்கு யாழ் மறைக்கோட்டத்திலிருந்து தெரிவு செய்வது கழகத்தின் செயற்பாடுகளுக்கு சிறப்பாக அமையும் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் தெரிவு இடம் பெற்றது.

பின்வருவோர் செயற்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - திரு. இ.அ. அமலரட்ணம்
உபதலைவர் - திரு. வின்சென்ற் டி போல்
செயலாளர் - திரு. பெ. பிரான்சிஸ்
உபசெயலாளர் - திருமதி. ரெஜீனா அலெக்சாண்டர்
பொருளாளர் - திரு. கில்பேட் குணம்

ஒவ்வொரு மறைக்கோட்ட கழகங்களில் இருந்தும், பக்தி சபைகள் மற்றும் அமைப்புகளிலிருந்தும் தலா ஒவ்வொரு உறுப்பினர்கள் செயற்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டனர்

பொதுச்சபைக் கூட்டம் 3 மாதங்களுக்கு ஒரு தடவையும் செயற்குழு கூட்டம் மாதாந்த போயா தினத்தன்றும் நடத்துவது என்ற முடிவு எடுக்கப்பட்டது. தொடர்ந்து செயலாளரின் நன்றி உரையோடு கூட்டம் நிறைவு பெற்றது.

இ.அ. அமலரட்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரித்தும் மரிக்காத மரியாள்

**- அருட்பணி மா. றேஜினஸ் இராசநாயகம் -**

**உள்ளடக்கம்**


01. விவிலிய ஆதாரம்
02. திருத்தந்தையின் பிரகடனம்
03. விண்ணேற்பின் செய்தி


### விவிலியத்தில் மரியாள் பற்றிய இறுதிக்கூற்று

விவிலியம் தரும் மரியா பற்றிய இறுதிக் கூற்று திருத்தூதர் பணிகள் நூலில் காணப்படுகிறது. ''அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவர்களுடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனதோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்'' (தி.ப. 1:14). என்ற கூற்றே மரியா பற்றிய இறுதி விவிலியக் கூற்றாகக் காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்கள், தூய ஆவியின் வருகைக்குப் பிறகு, அன்னை அன்னையின் வாழ்வு பற்றிய குறிப்புக்கள் எதையும் கூறவில்லை.

### விண்ணேற்பு பற்றிய விசுவாசக்கோட்பாடு

மரியாவின் விண்ணேற்பு பற்றிய விசுவாசக் கோட்பாட்டுப் பிரகடனம் விவிலிய, இறையியல் ஆதாரங்களுடன் வழங்கப்பட்டது. இறை மகன் இயேசு தமது மீட்புப் பணியை இவ்வுலகில் நிறைவு செய்த பிறகு, தந்தையாம் இறைவனால் உயிர்ப்பிக்கப்பட்டார். சாவின் சக்திகளால் மீட்பர் இயேசுவைத் தீண்ட இயலவில்லை. அதேபோன்று, அவரது அன்னையும் அழிவின் சக்திகளுக்குக் கையளிக்கப்பட இயலாது என்ற இறைமக்கள் சமூகத்தின் நம்பிக்கை நியாயமானதே என்பதற்கான அதிகாரபூர்வமான அங்கீகாரமே இவ்விசுவாச கோட்பாட்டுப் பிரகடனம்.

ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து இறந்தவர் உயிர்ப்பர் என்பதை உறுதியாக நம்பினார். உயிர்த்தெழுதலை நம்பாத சதுசேயரை எதிர்த்து வாதிட்டு உயிர்த்தெழுதல் உண்டு என்பதை இயேசு நிலை நாட்டினார். (மத்.22 : 23 -33).

அந்த உயிர்த்தெழுதலின் முழுப் பொருளும் தன்னில் காணப்படுவதை இயேசு ஐயத்திற்கு அப்பாற்பட்ட வகையில் தெளிவாகக் கூறினார். ''உயிர்த்தெழுதலும் வாழ்வும் நாமே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்'' (யோவா. 11:25) என்ற இயேசுவின் வார்த்தைகள் இவ்வுண்மையை தெளிவாக வெளிக்கொணர்ந்தன.

''இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார் என அறிவிக்கப்பட்டிருக்க, உங்களுள் சிலர் இறந்தோர் உயிர்த்தெழுவதில்லை எனச் சொல்வது ஏன்'' (1 கொரி. 15:12), என்று திருத்தூதர் பவுல் உயிர்த்தெழுதலைப் பற்றிய தனது அடிப்படைக் கிறிஸ்தவ விசுவாச நம்பிக்கையை கொரிந்து சமூகத்திற்கு வலியுறுத்தி அறிவிப்பதை காண்கின்றோம்.


திருத்தந்தையின் பிரகடனம் இத்தகைய திருவிவிலியப் பகுதிகளை ஆதாரம்காட்டி மரியாளின் விண்ணேற்புப் பற்றிய நம்பிக்கையை அங்கீகரிக்கிறது. இதற்கான ஏனைய நிரூபணமாக திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் மரியா பற்றி 1950.ல் எழுதிய சுற்றுமடல் ஏற்றுக்கொள்ளும் தடயங்கள், விண்ணேற்பு அரசிக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான ஆலயங்கள், துறவறச் சமூகங்கள், மறைமாவட்டங்கள், நகரங்கள், விண்ணேற்புப் பற்றிய ஓவியங்கள், சிற்பங்கள் ஆகியவையாகும். அன்னை மரியாளின் விண்ணேற்பு நம்பிக்கையும், அது பற்றி எழுத பல்வேறு உணர்வு பூர்வமான ஓவியங்களும் சிற்பங்களும் சீர்திருத்தக்காலத்தின் எதிர்ப்பலைச் சந்திக்க கத்தோலிக்க விசுவாச மரபிற்கும் பெரிதும் உதவின.

இவ்வாறு திருவிவிலியம், வாழும் கத்தோலிக்க கிறிஸ்தவ மரபும் செய்திகள் ஆகியவற்றின் பின்னணியில் வெளிப்படுத்தப்பட்ட மரியாவின் விண்ணேற்பு விசுவாசக் கோட்பாடு திருச்சபையில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றது. மக்களின் பொது ஆன்மீகத்தில் பல நூற்றாண்டுகளாக வழி வளர்ந்த இந்த நம்பிக்கைக்கு திருச்சபையின் அதிகார பூர்வமான அங்கீகாரம் உலகு தழுவிய கத்தோலிக்கரின் ஒட்டுமொத்த ஒப்புதலைப் பெற்றது எனலாம்.


# அர்ப்பணத்தின் பொன்விழா காணும் யாழ் அமலமரி அருட்தந்தையர்கள்




**பொன்விழாக் காணும் நாயகர்களை யாழ் ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினரும் பாதுகாவலன் நெஞ்சங்களும் இறை ஆசீர் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.**



அருட்பணி. பீலிப் ஸ்ரனிஸ்லோஸ்



அருட்பணி. செலஸ்ரின் ஞானசேதாசன் குருஸ்



அருட்பணி. சா.மீ. செல்வரட்ணம்



அருட்பணி. பீ யேசுநேசன்

# எப்படிப் போனது உங்கள் கோயில் திருநாள்?

- *[illegible]!*
- *ஆயர்தான் திருப்பலி நிறைவேற்றினார்!*
- *என்ன, எப்பவும் போலதான்!*
- *சகல மட்டங்களும் எல்லாம் செய்தீனம்!*
- *திருவிழா முடிய ''கடலில் கேவிலை போலதான் கப்பலும் எப்பவுந்தான்''* !

இப்படியான பதில்கள்தான் பொதுவாக எம்மவர்கள் திருநாள்பற்றிக் கூறுபவை. இந்தக்காலத்திற்தான் அநேகமான ஆலயத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

ஆலயத்திருவிழா எதற்காக? என்னைப் பொறுத்தமட்டில், எமது பங்கு வாழ்வின் வெளிப்பாடாக, எமது அன்புறவு - ஒன்றுபட்ட செயற்பாடு - மற்றவர்கள் மட்டிலான கரிசனை போன்றவைகளை ''கொண்டாடும்'' வாய்ப்பாகவும், எமது விசுவாச வாழ்வினை ஆழப்படுத்துவதற்கான வாய்ப்பாகவும், பிறரும் எமது விசுவாச வாழ்வைக் கண்டு கொள்ளும் சந்தர்ப்பமாகவும் திருவிழா அமைய வேண்டும்.

வருடா வருடம் செய்வதைச் செய்வதை, பல்வேறு காரியங்களைச் செய்பவர்கள் மட்டுமே அவற்றை இவ்வருடமும் செய்வது பங்கினை வளர்க்கும் வாய்ப்பாக இருந்துவிடாது. ஒவ்வொரு வருடமும் நடைபெறும் திருவிழா கொண்டாட்டங்கள் முன்னதைவிட எல்லா விதத்திலும் வளர்ச்சியடைவதாக இருக்காவிட்டால் எல்லாமே வீணாகப்போவது மட்டுமல்ல, எமது பங்கு வாழ்வு பல்வேறு ரீதியில் பின்னடைவைச் சந்திப்பதாகவும் அமையலாம். உதாரணமாக, சில 'முக்கிய' புள்ளிகளுமான (பணம், வசதி, அழகு, பங்குத் தந்தைக்கு வேண்டியவர்கள் போன்றவர்கள்) வருடா வருடம் எல்லாவற்றையும் செய்பவர்கள் என்றால், மற்றவர்கள் படிப்படியாக பங்குச் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கலாம்.

வழிபாடுகளும்கூட வருடாவருடம் அந்த முன்னவையாக அமைய ஆர்வம் காட்டாவிட்டால், அர்த்தமற்றவையாகிவிடலாம். இவ்விழாக்காலம் எமது நம்பிக்கையை வளர்ப்பவையாகவும், திருச்சபையின் வழிநடத்தல்களை மக்கள் அறியவும், நன்மைபயக்கக் கூடிய வகையில் வழிபடவும் எல்லோரையும் தூண்டுவதும் அவசியம். உதாரணமாக, நற்கருணைப்பவனியை சிறப்பாக நடாத்தியபின், ஆசீர்வதிக்கப்பட்ட நீர் தெளிப்பது வழிபாட்டின் உச்சநிலை என்பது போன்ற செயற்பாட்டை ஏன் மாற்ற முடியாது?

சமூக கொண்டாட்டங்களில் மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்க, எமது விழாக்களில் மட்டும் காலாகாலமாக அதே விதமான வழிபாடுகளும், செயற்பாடுகளும் நடைபெறுவது எமது விசுவாச வாழ்வின் சோர்வை சிலவேளை காட்டலாம். இறுதி நாட்களின் வழிபாடுகளில் முழுமையாகப் பங்குபற்றுவதைவிட, வெளிக்காரியங்களில் ஈடுபடுதல் (சாப்பாடு ஆயத்தம் செய்வது, சோடினை வீதும், உணவு தயாரிப்பதிலும் பங்கிடுவதிலும் வழிபாட்டு நேரங்களையும் செலவு செய்தல்). பங்குத்தந்தை முதன்மையான வழிபாடுகளில் பங்குபற்ற முடியாது வேறு காரியங்களில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படல் போன்றவைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று தோன்றுகின்றது.

இறுதி நாட்களில் பங்குபற்றும் குருக்களின் தொகையைக் கொண்டு, திருவிழா சிறப்பாக நடைபெற்றது என்று கூறுவோர் இன்றும் பலர் உள்ளனர். இவ்விதமான விழுமியம் எங்கிருந்து வந்தது? திருவிழாவினை சிறப்பிக்க வேண்டியது பங்குக் குடும்பமே. அவர்களுடைய ஈடுபாடும், செயற்பாடுகளும், உளமாற்றமுமே திருவிழாவின் 'வெற்றிக்கு' அடையாளங்களாகவிருக்கும். அத்தோடு பல குருக்கள் (மறையுரை ஆற்றுபவர், பவனியை முன்னின்று நடத்துபவர்போன்றவர்களைத் தவிர) திருவிழா திருப்பலியில், அதுவும் குறிப்பாக ஒன்று, பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றுவதைப் பார்க்கும் போது, அவர்களுக்கு வேறு பணிகள் அன்று இல்லையா என்று கேட்போரும் இல்லாமலில்லை.

ஒரு பங்கு திருவிழாவின் இறுதியில் ஒரு சிறப்பான செயற்பாட்டில் பங்குபெறுவது (உதாரணமாக, பங்கிலுள்ள ஏழை ஒருவரின் வீட்டைத்திருத்த உதவுவது, ஒரு பிள்ளையின் கல்விக்கு உதவுவது) பங்கின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கலாம்.

திருவிழா வழிபாடுகள், செயற்பாடுகளில் பங்கிலுள்ள எல்லா மக்களும் எந்தவொரு வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் இன்றி, பங்குபற்றுவதுடன், திருவிழாவிற்குப்பின் இன்னும் ஆர்வத்தோடு, ஒன்றுபட்டு செயற்படுவார்களேன்றால், திருவிழா உண்மையாகவே எமது பங்கு வாழ்வை வளர்த்துள்ளது என்று துணிவோடு கூறலாம். நாம் எடுத்த எல்லா முயற்சிகளும் பலனுள்ளவையாக அமைவது மட்டுமல்ல, மற்றைய பங்குகளுக்கும் முன்னுதாரணமாக அமைந்தன என்றும் நாம் மகிழலாம்.

**ஜெறி சந்திரியா**

# புனித யாகப்பர் ஆலய புனித வின்சென்டி போல் சபைப் பெண்கள் பந்தியின் 20வது ஆண்டு விழா



குருநகர் புனித யாகப்பர் ஆலய புனித வின்சென்டிபோல் சபை பெண்கள் பந்தியின் இருபதாவது ஆண்டு விழா 02.08.2009 அன்று மிகச் சிறப்பாக நடந்த வேளை மத்திய சபை ஆன்ம ஆலோசகர் அருட்பணி R.H. சகாய நாயகம் அருட்பணி. R.C.X நேசராஜா பங்குத் தந்தை அவர்களுடன் அங்கத்துவர்கள்.

''சின்னஞ்சிறிய என்சகோதரருள் ஒருவருக்கு நீங்கள் இவற்றைச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்'' (மத் :25.40) என்ற இறைவார்த்தையினைத் தமது தாரக மந்திரமாகக் கடைப்பிடித்து பணியாற்றி வரும் புனித வின்சென்டி போல் சபை குருநகர் பெண்கள் பந்தியினர் தமது இருபதாவது வருடாந்த பொதுக் கூட்டத்தினை கடந்த 2.8.2009 அன்று புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடாத்தினர்.

ஆன்ம சபை ஆலோசகர் கூறும் போது நான் இவ் ஆலயத்தின் பங்குத்தந்தையாய் இருந்த போது இச்சபையின் சகோதரிகள் ஆற்றும்பணி மிகவும் சிறப்பானது. கடந்த இருபது ஆண்டுகளாக துயருற்றோருக்கு துணை நிற்கும் இவர்களை மனமார வாழ்த்துகின்றேன், என்றார்.

பங்குத்தந்தை அருட்பணி நேசராஜா கூறும் போது இச்சபையின் பணியாளர்கள் தமது வீட்டுப் பொறுப்புக்கள் மத்தியிலும் வீடு வீடாகச் சென்று பிடி அரிசி மகிமை அங்கத்தவர்களிடம் உபகாரிகளிடமும் ஏழை மக்களுக்காகக் கையேந்தி வாழ்பவிக்கின்றனர். இவர்கள் பணி தொடரவேண்டும் அப்போதுதான் துயருறுவோர் ஓரளவாவது நிம்மதி அடைவர் என்றார்.

அனைவரது பாராட்டுக்களுடன் திருமதி. அன்ருவெனற் கில்பேட்டின் நன்றி நவிலலுடன் இனிது நிறைவு பெற்றது.

ஜீ.பீ. பேர்மினஸ்

# வெண்புரவி மீதேறி வெற்றி கொண்ட வீரன்

கடலலை கொஞ்சும் நகரமாம் குருநகரில் கோயில் கொண்டு குடியிருக்கும் செபதேயுவின் மகனான புனித யாகப்பரின் பெருவிழா 25.07.2009 அன்று ஆயர் குருக்கள் அருட் சகோதரர்கள் அருட்சகோதரிகள் வழிநடத்தலில் பங்கு மக்கள் அனைவரும் மிகவும் விமரிசையாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

''இடர்வரினும் கிறிஸ்துவின் பயணம் தொடர்'' என்ற விருதுவாக்கினை தாரக மந்திரமாகக் கொண்டு 16.07.2009 காலை திருப்பலியின் பின் புனிதரின் கொடியேற்றத்துடன் தமது வாழ்வை புதுப்பிக்க பங்கு மக்கள் திடசங்கற்பம் எடுத்தனர்.

திருநாள்திருப்பலியினை எமது ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஒப்புக்கொடுத்தது மிகச் சிறப்பாக அமைந்தது. அவர் தமது மறை உரையில் செபதேயுவின் புதல்வர்களாகிய அருளப்பரும் யாகப்பரும் யேசுவோடு உறவாடியிருந்த போது எவ்விதம் ஒற்றுமையாக இருந்தனர் என்பதையும், எமது வேதாகமத்தில் அருளப்பர் கதைப்பது மட்டும் உள்ளது யாகப்பர் அமைதியானவராக இருந்தாலும் அவர் கதைத்ததாக வாக்கியங்கள் எதுவும் இல்லை அமைதியாகவே இருந்திருக்கின்றார். இரு சகோதரர்களும் மிகவும் நெருக்கமாகவும் அன்னியோன்னிய உறவோடும் வாழ்ந்தார்கள் என்பதற்கு வேதாகமம் சாட்சி சொல்லுகின்றது. ஆனால் இன்று நம் சமூகத்தில் சகோதர உறவுகளில் ஏற்படும் விரிசல் பகைமை அடிபிடி சண்டையே நாம் காணக்கூடியதாய் இருக்கின்றது என்று உறவின் மகத்துவத்தை மிகவும் எளிய தமிழில் அழகாக எடுத்துரைத்தார். இடையிடையே தமது பாணியில் சிறு கதைகள் கூறி பக்தர்கள் மனங்களைத் தம்வசம் ஈர்த்துக் கொண்டார் ஆயர்.

இவ்விழாவை அருட்பணிச்சபையின் உதவியோடு பங்குத்தந்தையும் உதவிப் பங்குத்தந்தை நெறிப்படுத்தியிருந்தமை பாராட்டுக்குரியதாய் அமைந்திருந்தது. ஒரு சமூகத்தின் கலாச்சார விழுமியமாக அமைவது அதன் ஆலயமும் வழிபாடுகளுமே இறைவன் வல்லமையுடன் மிகச்சிறப்பாக புனித யாகப்பர் ஆலயப் பெருவிழா 2009 நடைபெற்றது.

**ஜீ.பீ. பேர்மினஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருத்துவத்தின் தனித்துவம்




**- அருள்பணி இராசேந்திரம் ஸ்ரலின் -**

> குருத்துவம் என்பது தாபோர் மலையின் உருமாற்ற மகிழ்ச்சியும், கெத்சமெனித் தோட்டத்து அச்சமும் கலக்கமும், கல்வாரிப்பயண வேதனையும் மரணமும், கலிலேய மலை உயிர்ப்பு மகிழ்வும் கலந்து ஒரு சுழல் வட்ட அனுபவம்.

குருத்துவம் என்பது இறைவன் தரும் நல்ல கொடை. அதனால்தான் இன்றும் குருத்துவத்தைப் பல இளைஞர்கள் தேர்ந்தெடுக்கின்றார்கள். குருக்கள் இடம்பெயர்ந்து யுத்தத்தில் அல்லலுற்று வசதியின்றி, துன்பங்கள் நிறைந்த வாழ்வு வாழ்வதைக் கண்டும் இளைஞர்கள் இவ்வாழ்வை விரும்புகின்றார்கள் என்றால் குருக்களின் வாழ்வு அர்த்தம் கொடுப்பதாக அமைகின்றது என்பதுதான் உண்மை. குருத்துவம் தனித்துவமான அடையாளம் கொண்டது. பிறரால் எதெல்லாம் செய்ய முடியாதோ, எது குருவால் மாத்திரம் செய்ய முடியுமோ அதுவே குருத்துவத்தின் தனித்துவ அடையாளம் என்று சுருக்கிக் கூறலாம். (கீழ்காணும் பணிகளில் சில அருள்சகோதரிகள், அருள்சகோதரர்கள், பொதுநிலையினரால் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை மறக்காது கருத்துக்களை முன்வைக்கின்றேன்)


### திருப்பலி ஒப்புக்கொடுப்பது :

இதுவே குருத்துவத்தின் தனித்துவ அடையாளத்தின் முக்கிய ஒரு அம்சம். மக்களின் துன்பங்கள் வேதனைகள், மகிழ்ச



சிகள், நன்றிப்பண்புகள்... என்பவற்றைக் குரு தனித்துவமான முறையில் திருப்பலியில் இயேசு வழியாக விண்ணகத் தந்தைக்கு ஒப்புக்கொடுத்து நமக்கு ஆறுதலும் பாவ மன்னிப்பு அருளும் பெற்றுத் தருகின்றார். மக்களுக்காகச் செபிப்பது மக்களின் செபங்களையும் காணிக்கைகளையும் இறைவனுக்கு ஒப்புக்கொடுப்பது குருவின் முக்கிய பணிகளில் ஒன்றாக விளங்கின்றது

### இறைவனின் செம்மறி :



திருப்பலி வாழ்வின் ஒரு அம்சமே துன்பமாகவாகும். குருத்துவ வாழ்வு சொகுசானது என்று சிலர் தவறாகக் கருதினாலும் குருத்துவம் என்பது இன்பமும் துன்பமும் கலந்த ஒன்று என்பதை ஒவ்வொரு குருவும் அனுபவத்தால் அறிவர். துன்பத்தின் வகைகளில் குருக்களிடையே வேறுபாடு காணப்பட்டாலும் துன்ப அனுபவத்துக்கு உள்ளாகாத குரு எவரும் கிடையாது. துன்புறுதல் குருத்துவத்தின் பிரிக்க முடியாத அம்சமாகவே என்றும் விளங்குகின்றது. அந்த வகையில் குருத்துவம் என்பது தாபோர் மலையின் உருமாற்ற மகிழ்ச்சியும், கெத்சமெனித் தோட்டத்து அச்சமும் கலக்கமும், கல்வாரிப் பயண வேதனையும் மரணமும், கலிலேய மலையின் உயிர்ப்பு மகிழ்வும் கலந்த ஒன்றுதான். இவை மாறிமாறி வரும் சுழல்வட்ட அனுபவங்களாக விளங்குகின்றன. குரு மக்களுக்காக உலகுக்காகத் தன் துன்பங்களை ஒப்புக்கொடுத்து இறையாட்சியை விரைவுபடுத்த அழைக்கப்பட்டவர். அந்த வகையில் குரு உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறி, ஓர் பலிக்கடா, துன்புறும் பணியாளர் (ஊழியர்). இது குருத்துவத்தின் தனித்துவங்களில் முக்கியமான ஒன்று என்று கூறலாம்.

துன்பங்கள் நிறைந்திருந்தாலும் இதயத்தின் ஆழத்தில் நிறைவையும் அமைதியையும் கொண்டதுதான் குருத்துவம் என்பதே அனுபவம். குருத்துவத்தில் மகிழ்ச்சியில்லை யென ஒரு குரு கூறுவாராயின் அல்லது குருவாக வரவிரும்புவர்களின் ஆவலைத் தணிப்பாராயின் அவர் இறையருளின் செயலாற்றலை, அது தரும் நற்பயன்களை உணராது நன்றி மறந்து வாழ்கின்றார், சுயபரிதாப அனுபவத்தில் மூழ்கி உள்ளார் என்றே கூறலாம்.

மக்களின் கல்லெறிந்து காயப்படுத்தும் குறைப் போக்குகள் குறையும்போது குருத்துவத்தின் வீண் துன்பங்களைக் குறைக்க முடியும். குருக்களின் பணியின் தனித்துவத்தை மதித்து இறைமக்கள் நடந்து கொள்ளும்போது அவர்கள் தம் பணியில் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் தொடர வைக்கும் ஊக்கியாக அமையும்.

### ஒப்புரவு அருட்சாதனம்:



மக்கள் தம் பாவத்தால் இறையருளை இழந்து ஆன்மாவிலே களங்கி உள்ளத்திலே குத்துண்டவர்களாகத் துவண்டு தம் தவறுணர்ந்து இறைவனிடம் மன்னிப்புக்கேட்க வருகின்ற வேளையில் குருமட்டுமே பரிந்துணர்ந்து ஆறுதல் கூறுவதும் அருள்வாழ்வில் தொடர நல்ல அறிவுரைகள் கூறுவதும், இறைவன் மன்னித்துவிட்டார் என்பதை உறுதி செய்பவரும் குருவே. மேலும் பாவத்திலிருந்து மீள முடியாது தவிப்போருக்காக இறைவனிடம் செபிப்பதும் அவர்கள் பணியாகின்றது. இறைமக்கள் தம் பாவக் காயங்களை மட்டுமல்ல தம் இதயக் காயங்களையும் பெரும்பாலும் குருவிடமே பகிர்கின்றனர். குரு தம்பத் தருத்தவர் இரகசியம் பேணுபவர் என்ற அனுபவ வழி நம்பிக்கை என்பது இன்னொரு காரணம்.

### பரிந்துபேசுகின்றவர்:



"சுவாமி எனக்காக மன்றாடுங்கோ." என்று இறைமக்கள் கூறும் போது அவ்வார்த்தைகளுள் வேதனை, அச்சம், ஏக்கம் என்பன தொனிக்கும். அவ்வாறான வேண்டுதல்களை முக்கியமான பணியாகக் கருதி குரு தனிச் செபத்திலும், திருப்பலியிலும் செபிக்கின்றார். மக்கள் நலமான வாழ்வுபெற இறைவனை வேண்டுவதும் அவர்கள் அவலைகளாக வேதனைப்படும்போது அவர்களுக்காப் பரிந்துபேசி உருக்கத்தோடு வேண்டவும் குரு தவறுவதில்லை.

### வழிகாட்டி:



வழிதவறிப்போய் மனம்குழம்பி அல்லல் கொண்டு திரும்பி வர நினைப்பவர்கள், திரும்பி வர வழி தெரியாது தவிப்பவர்கள் தேடி வருவதும் குருவிடம்தான். அந்த வகையில் ஏனைய ஆன்ம வழிகாட்டிகளைவிட தனித்துவமான வழிகாட்டியாக விளங்குகின்றார்.

### வாழ்வைப் பகிர்தல்:

வெருக்கும் சொல்லாத இரகசியங்களை, தம் தவறுகளை, வேதனைகளை மக்கள் மனம் திறந்து பகிர்வது குருவுடன் என்பது மறக்க முடியாது. இறந்த வீடு என்றால் சுவாமியைக் கண்டவுடன் சொந்தத் தகப்பனைக் கண்டதுபோன்று தம் இதய வேதனையில் வாய்விட்டு அழுவது இறப்பு வீட்டில் நாம் காணும் அனுபவம். குருவின் ஆறுதல் வார்த்தை பெற்றுத் தெளிவோடும் நம்பிக்கையோடும் மக்கள் தாம் இழந்த எதையும் தாங்கி வாழ்வது அன்றாட அனுபவம். வீட்டில் நல்லது நடந்தால் குருவுக்குச் சொல்லி மகிழ்வது நம் மக்கள் அனுபவம்.



### இறைதிட்டம் வெளிப்படுத்துபவர்:



இறைதிட்டம் எது இறைவிருப்பு எது என்பதை தேர்ந்து தெளிந்து வெளிப்படுத்துவதன் மூலம் மக்கள் தம் ஆன்மீகத்திலும், ஒழுக்கத்திலும், நல் ஒழுங்கிலும் நெறிப்படுத்தும் உன்னத பணியைச் செய்பவர் குரு. தம் மறையுரைகளாலும் தனிப்பட்ட முறையில் அறிவுரை வழங்குவதாலும், எழுத்துப்பணிகளாலும் பலர் இறைவனின் விருப்பின்படி வாழ்ந்து அர்த்தமுள்ள வாழ்வு பெற வழிகாட்டுகின்றனர்.

### மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்:

அரசியல்வாதிகள் வளமான வாழ்வளிக்கப்போவதாக வாக்குறுதி அளித்தாலும், வாக்குறுதி ஒருபோதும் அளிக்காது தம் உயிரைக்கூடத் துச்சமென மதித்து மக்கள்



நலனில் அக்கறை கொண்டு சேவையாற்றுபவர்கள் குருக்கள் மட்டும்தான் என்பது யுத்தகால அனுபவம். மக்கள் மந்தைகள் போல அங்கே போ இங்கே என்று மேய்க்கப்படும்போது மக்களின் உரிமைக்காகத் துணிந்து குரல் கொடுப்பவர்கள் குருக்களே. யுத்தத்தாலோ இயற்கை அனர்த்தத்தாலோ அல்லலுறும் மக்களை உடனடியாக தேடி ஓடிச்சென்று அவர்கள் தேவைகளைத் தவிர்ப்பதில் முன்னின்று உழைப்பவர்களும் குருக்களேதான். முகாம்களில் முடங்கிக் கிடந்தாலும் சரி, உடற்துணமாக்கல் நிலையங்களில் நோயோடு, காயங்களோடு துன்புறும் போதாகிலும் சரி, அவர்களுக்கு ஆதரவும் உதவியும் வழங்கும் பணியை வழங்க ஒழுங்குகளை மேற்கொள்வதில் முன்னிடம் வகிப்பவர்கள் குருக்களே

யுத்தவேளையில் வன்னியில் குருக்கள் இல்லாத நிலை ஏற்பட்டிருந்தால் நிலைமை இன்னும் எவ்வளவு மோசமாய் போயிருக்கும் என்பதை சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு குருத்துவத்தின் மகத்துவம் தனித்துவம் புரியும். யுத்த உச்சத்தில், "ஆயுதங்களைப் போட்டுப் பேச்சு வார்த்தைக்குப் போங்கோ. மக்களைப் போக விடுங்கோ." என்று தமக்கு வரக்கூடிய உயிராபத்துகளைக்கூடக் கருத்தில் எடுக்காது சொல்ல வேண்டியவர்களுக்குத் துணிந்து சொன்னவர்கள் அது நம் குருக்கள்தான். "நாங்கள் மக்களுக்குச் சேவை செய்யத்தானே கடைசிமட்டும் நின்டனாங்கள். இங்கேயே தொடர்ந்து இருந்து பணியாற்றப்போகின்றோம்." என்று ஆயருக்குச் செய்தி அனுப்பி, மக்களோடு மக்களாக இன்று கூடார முகாம்களில் வாழும் குருக்கள் அங்கு துன்புறும் மக்களுக்கு ஆறுதலாயிருப்பதோடு, தியாகத்துக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றனர். துன்புறும் மக்களோடு இறுதிமட்டும் வாழ்ந்து உயிர்துறந்த நம் இளங்குரு ஒரு மறைசாட்சி. துன்பம் மலைபோல வந்தாலும் மக்களை விட்டுத் தன்னலனைக் கருத்தில் கொண்டு வாழ நினைக்காது அவர்களோடு தாமும் சேர்ந்து துன்புற்றவர்கள் துன்புறுகின்றவர்கள் நம் குருக்கள் என்பது பெருமைப்பட வேண்டிய விடயம். தாம் பிரிந்த சபையில் சுயநலங்களோடு சேர்ந்துவிட்டு குருக்களின் குறைகள் தான் காரணம் என்று கூறுபவர்கள், தம் சபைத் தலைவர்கள் யுத்த காலத்தில் மக்களோடு இருந்து பணியாற்றினார்களா ஓடித் தப்பினார்களா என்று தரவு சேகரிக்க ஆரம்பித்தால் உண்மை புரியும்.

### ஏழைகள் அனாதைகளுக்கு நங்கூரம்:




ஏழைப்பிள்ளைகளைப் படிக்க வைப்பதாக இருந்தாலும் சரி பிள்ளைகளைக் கரை சேர்ப்பவராக இருந்தாலும், நல்ல உணவு உடை கிடைக்காதோர்க்கு அவற்றை வழங்குவதாக இருந்தாலும் சரி குருவின் பங்களிப்பு அதிகம். இதிலே ஏனைய சமூக சேவையாளர்களைவிடத் தனித்துவமான முறையில் செயற்படுகின்றனர். இவ்வாறு சமூகநலப்பணிகள் (அன்புச்சேவை) இறைவனின் அன்பை இரக்கத்தை, அக்கறையை அளிப்பதாகவே அமைகின்றது. கல்வித் துறையாக இருந்தாலும் சரி, உடற்துணமாக்கல், உளஆற்றுப்படுத்தல், தொழிற்பயிற்சி வழங்கல் என்பன இறைவனின் இரக்கத்தை அன்பை வெளிப்படுத்தும் கருவிகளேயன்றி வேறல்ல.

**முடிவுரை:-** குருத்துவம் தனித்துவமான இறைக்கொடை. அது மக்கள் நலனையே முன்னுரிமைப்படுத்துவது, மக்களுக்காகவே இயங்குவது. குருக்கள் வெறும் இந்த உலகில் இல்லாவிட்டால் மக்கள் வாழ்வில் என்னென்ன நிகழ்ந்திருக்கமாட்டாது?, மக்கள் வெற்றை பெல்லாம் இழந்திருப்பார்கள்? குருக்களால் என் வாழ்வில் என்னென்ன நன்மைகள் நிகழ்கின்றன? ளைச் சிந்திப்பது குருத்துவத்தின் அர்த்தத்தையும் தனித்துவத்தையும் குருக்களும் பொதுநிலையினரும் ஆழமாகப் புரிந்துகொள்ள வழியமைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருக்கள் ஆண்டு
# ஜூன் 2009 - ஜூன் 2010



## குருகுலமே வாழ்க

மனித நேய மாண்பை மக்களிடையே விதைக்கும்
மாண்புமிக்க மகிமைமிக்க அன்பு மிக்க தியாகமிக்க
அருட்பணியாளர்களே உங்களோடொருகணம்.........

குருத்துவப் பணியை குறைவறா ஆற்றும்
குன்றின் மணிகளே குருகுலக் கொழுந்துகளே

பணி வாழ்வு வாழ ஊழியம் புரிய
பரமன் கட்டளை சிரமேற் கொண்டு

கனிந்த உள்ளத்தோடும் கடமையுணர்வோடும்
காலம் பாராது காக்கும் உங்கள்

தியாக வாழ்வு தீபந்தான் ஐயா
தினம் உங்கள் வாழ்வு தாபந்தான் ஐயா

பணி வாழ்வு ஊழியத்தை அணிகலனாய் பூண்டு
பவனி வரும் உங்கள் பரித்தியாக வாழ்வு
கலங்காமலிருக்க
பறிபோகாமலிருக்க
உறுதியோடிருக்க
அசைவில்லாமல் இருக்க
பரமன் பாதம் பணிந்து நின்று
பிதாவை நோக்கி
தினம் பிரார்த்திக்கின்றோம்.

ம. பிரின்சிபாலினா
கன்னாகம்.



## அருட்பணியாற்றும் அருட்பணியாளர்களை

பங்குகள் தோறும் அருட்பணியாற்றும் அருட்பணியாளர்களே
இறைவாக்குரைக்க இறைவனால் தேர்ந்து
கொள்ளப்பட்ட கருவிகளே
இறைவனின் வழிவந்த இறைபணியாளர்களே
குருக்களின் ஆண்டுதனில் உம்மை வாழ்த்துகின்றோம்

சகபோகங்கள் துறந்து வாழ்வின் சிறுமைகள் சுமந்து
ஆன்மீக வழிநடக்க மக்களுக்கு நல்வழிகாட்டி
இறையழைத்தலை ஏற்றுவாழும் இயேசுவின்
சீடர்களே
உம்மை வாழ்த்துகிறோம் போற்றுகிறோம்

உன்னத கொடையாம் குருத்துவமதனை
விரும்பிய ஏற்று மக்களுக்காய் தம்மை அர்ப்பணித்து
கிறிஸ்துவின் சாட்சிகளாய் மக்களுக்கு முன்மாதிரியாய்
வாழும் அருட்பணியாளர்களே
வேண்டுகின்றோம் உங்களுக்காய் இறைவனையே

இல்லை என்று வந்தோரின் இல்லாமை போக்கி
கண்ணீரோடு வந்தோரின் கவலை தீர்த்து
மக்களின் வேண்டுதலை இறைவன் பாதம் வைத்து
வேண்டுகின்றீர் என்றுமே எமக்காய் இறைவனிடம்

குருக்களின் ஆண்டுதனில் இறையழைத்தல் பெருக
கிறிஸ்துவின் திருவுளம் நிறைவேற இறை
மக்களுக்கு பணிபுரிய
ஆர்வமுள்ள பணியாளர் இறை அழைத்தலுக்கு செவிமடுக்க
வரம் தாரும் இறைவா உம் தாள் பணிகின்றோம்.

அ. யஸ்மின், குரவெட்டி.

## வெள்ளி விழா காணும் நாயகனே வாழ்க

தாயின் கருவிலே
பெயர் சொல்லி உனை அழைத்து
நீ போகும் இடமெல்லாம்
உன்னோடு வருவேன்
கலங்காதே திகையாதே
என்று எடுத்துரைத்தார் பரன்

ஆழக்கடலின் அமைதியும்
வீசும் தென்றலின் குளிர்ச்சியும்
உம் அருளுரையில் எதிரொலிக்கும் - குருவே
ஆன்மாவைத் தேடி அலைந்த ஆயனே
ஆண்டிருபத்தைந்தின் சேயனே
வெள்ளி விழா காணும் நாயகனே
நீ நீடு வாழ்க

ஆண்டவன் புத்திரர் நாம்
ஆவலுடன் தேடி வந்தோம்
நூறாண்டு வாழ்கவென
உனை இறைஞ்சுகின்றோம்
நேசத்தின் காவலன் நீ
நேசிக்கு ராஜா நீ
பாசத்தின் கொடுமுடியாய்
பாரினிலே வாழ்ந்திடுவீர்
கடந்து வந்த பாதையெல்லாம்
எதிர் நீச்சல் போட்டு வந்து
காவியங்கள் படைத்து விட்டாய்

கர்த்தரின் திருவடியில்
பக்திச் சபை அதனை
பாங்குடன் வழிநடத்தி
எத்திக்கும் புகழ்பரப்பி
உப்பாக ஒளியாக
உலகிற்கு சான்றானாய்
தந்தையின் வழிநடந்து
நானிலம் புகழ் காத்த
அவரது சேவைதனை தொடர்ந்தாற்ற
குருதுகரம் இப்பங்கில்
தொடர்ந்தாற்றும் சற்குருவே
நம்மையனே நீ வாழ்க
நம் பங்கின் காவலனாம்
அந்தோனி மாமுனியை
எப்போதும் ஓடிச் சென்று
அமைதிதனைப் பெற்றிடுவாய்
நீண்ட பயணத்தில் சோர்வுகள் அயர்வுகள்

அனைத்தையும் தாங்கி வழிநடந்த - நற்குருவே
தொடர்ந்து வரும் பயணத்தில்
உம் சேவை செழித்தோங்க
தூய நல் ஆவியின் துணை வேண்டி
நிற்கின்றோம் மரியாயின் சேனையர்கள்

வாழ்த்துக்கள் கூறும்
மரியாயின் சேனையர், நவாலி

## மாணவர் பக்கம்

## காலத்தின் தேவையில் அமைந்த க.பொ.த உயர்தரப் பயிற்சிச் செயலமர்வு

நவீன மயப்படுத்தப்பட்ட கல்வி சீர்திருத்த அமைப்பிற்குள் மாணவ சமூகம் உள்வாங்கப்படும் இவ்வேளையில், அவர்களின் கல்விசார் நடவடிக்கைகளும், புறநிலைச் செயற்பாடுகளும் விரைவாக முன்னெடுக்கப்பட்டு, உரிய நேரத்தில் கற்றல் செயற்பாடுகள் மாணவர்களைச் சென்றடைந்து உச்சப்பயனைப் பெறுவது கல்வித் துறையில் அனைவரதும் நோக்கும் முயற்சியுமாகும்.

இந்த வகையில் 2009 ஆம் ஆண்டிலிருந்து க.பொ.த. உயர்தர வகுப்புகள் அனைத்திற்கும் கல்வி அமைச்சினால் புதிய பாடத்திட்டம் அமுல்படுத்தப்பட்டமை யாவரும் அறிந்ததே. எனவே உயர்தரத்தில் கிறிஸ்தவத்தைக் கற்பிக்கும் யாழ் மாவட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு 29.07.09 - 31.07.09 வரை யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெற்றது.

இச்செயலமர்வானது கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரிகம் தொடர்பான புதிய பாடப்பரப்பிற்கான விளக்கம் கொடுக்கப்பட்டதுடன், புதிதாக அறிமுகமாகும் 'கிறிஸ்தவ நாகரிகம்' தொடர்பான பாடத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு 12ஆம் தரத்திற்கான பாடத்திட்டத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமை பயனுடையதாக அமைந்தது.

மேற்படி செயற்றிட்டமானது, கத்தோலிக்க கிறிஸ்தவ விவகார செயற்திட்ட அதிகாரி அருட்பணி. A.R.L. சாந்திக்குமார் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான விரிவுரைகள் யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களான அருட்கலாநிதி. G. பிலேந்திரன், அருட்கலாநிதி. E. ஜெயசீலன், அருட்கலாநிதி. ஜெயமோகன், மற்றும் அருட்பணி. சந்திரபோஸ் குருஸ், ஆசிரியை திருமதி. A. மல்லிகா ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது. இச் செயலமர்வில் 60 ஆசிரியர்களின் கற்றல் செயற்பாடுகளைத் தடையின்றித் தொடர்வதற்கு ஏற்றமுறையில் நடாத்தப்பட்டமை பாராட்டிற்குரியதாகும். இதனை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க, கிறிஸ்தவ ஆசிரியர் குழுமத்தினர் தமது மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்ததுடன், தரம் 13இற்கான பாடத்திட்டத்திற்கான செயலமர்வினையும் விரைந்து நடாத்துதல் காலத்தின் தேவை என்ற வேண்டுகோளும் ஆசிரியர்களால் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

S.M. வுளோறன்ஸ்

## கருகிய பாண்துண்டொன்று நிறைவில்லாத பண்பினால் உறவொன்றை உடைக்க அனுமதிக்காதீர்கள்

### சிறுமி ஒருத்தியால் கூறப்பட்ட உள்ளத்தைத் தொடக்கூடிய ஒரு கதை

நான் சிறுமியாக இருந்த போது என்னுடைய தாயார் காலை உணவைத் தயாரிப்பதில் ஆர்வமுள்ளவராக இருந்தார். ஒரு நாள் அவர் கடும் வேலைகளுக்குப்பின் காலை உணவைத் தயாரித்திருந்தது எனக்கு ஞாபகத்தில் உள்ளது.

அன்று என்னுடைய அம்மா ஒரு கோப்பையில் முட்டைகளையும் கொஞ்சம் அதிகம் கருகிவிட்ட பாண் துண்டுகளையும் அப்பாவின் முன் வைத்திருந்தார். நான் வேறு யாரும் அதை அவதானிக்கிறார்களாவெனப் பார்த்துக் கொண்டிருந்தேன். எனது தந்தையும் அம்மாவைப் பார்த்து புன்னகை செய்தபடி அதைச் சாப்பிட்டார். நான் அவருக்கு என்ன கூறினேனென எனக்கு ஞாபகமில்லை. ஆனால் அவர் அப்பாண் துண்டுகளுக்கு பட்டரையும், ஜெலியையும் பூசி ஒவ்வொரு துண்டையும் சாப்பிட்டது எனக்கு ஞாபகமிருக்கிறது.

நான் மேசையிலிருந்து எழுந்த போது அம்மா அப்பாவிடம் பாண் துண்டுகளை கருக விட்டமைக்காக மன்னிப்பு கோரினார். ஆனால் அப்பா கூறியவற்றை என்னால் மறக்க முடியாது. அவர் அம்மாவிடம் தனக்கு கருகிய பாண் துண்டுகளே எனக்கு விருப்பம் எனக் கூறினார்.

நான் இரவு படுக்கைக்கு போகும் முன் தந்தையை முத்தமிடச் சென்றேன். அப்போது அவருக்கு உண்மையிலேயே கருகிய பாண் துண்டுகளில் விருப்பமா எனக்கேட்டேன். அவர் என்னை தன் கைகளால் அணைத்துக் கொண்டு அம்மா இன்று கடினமாக வேலை செய்துள்ளார் அவர் உண்மையிலேயே களைப்படைந்துள்ளார். அத்தோடு கொஞ்சம் கருகிய பாண் யாருக்கும் பெரிய வேதனையைக் கொடுக்கப் போவதில்லை. வாழ்க்கை நிறைவில்லாத பொருட்களும், நிறைவில்லாத மனிதர்களும் நிறைந்ததாகும். நான் ஒரு நல்ல வீட்டுப் பராமரிப்பாளனோ அல்லது சமையல்காரனோ அல்ல அவர் தொடர்ந்து சொன்னார். ஒவ்வொருவர் மற்றவருடைய தவறுகளை ஏற்றுக் கொள்வதும், மற்றையோருடைய தனிமனித வேறுபாடுகளையும் அங்கீகரிப்பதுமே அடிப்படையான நலமும் வளர்ச்சியும் இறுதிவரை நிலைத்திருக்கும் திருமண உறவொன்றினை உருவாக்குவதில் முக்கியமானவை என கடந்த காலங்களில் கற்றுக் கொண்டேன்.

இதுவே உனக்கு எனது இன்றைய செபமாகும். நீ உன்னுடைய வாழ்வில் நல்ல தீய அவலட்சணமான பகுதிகளை எடுத்து அதை இறைவனின் காலடியில் வைத்துவிடு. ஏனென்றால் இறுதியில் அவரே கருகிய பாண் துண்டினால் உறவை முறித்துவிடாதே திருமண வாழ்வை உனக்கு தருவார்.

நாம் இந்நிகழ்வை திருமண உறவுக்கு மட்டுமல்ல பெற்றோர், பிள்ளைகள், நண்பர்களுக்கிடையேயுள்ள உறவுக்கும் பயனுடையதாக்கலாம்.

அருட்பணி. டேவிற்,
நியூயோர்க்.

## முடிந்தால் முயன்று பாருங்கள்!

கீழுள்ள ஒரு சொல் தடித்த எழுத்தில் உள்ளது அதனுள் அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைகள் ஒழிந்துள்ளன. அதனை கண்டு பிடியுங்கள்.

### சாவகச்சேரி

1. செயலகத்தின் மறுபெயர்.
2. அரசாங்கம் அறவிடுவது.
3. மானின் ஒருவகை
4. மக்கள் நெருக்கமாக வாழும் பகுதி
5. இறத்தலைக் குறிப்பது.
6. சேமி எனத்தூண்டுவது.
7. வரிசையில் செல்வதைக் குறிக்கும்.
8. யானையின் மறு பெயர்

விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

### சந்திர மண்டலம்

1. வீதிகள் இணையுமிடம்
2. பூக்களால் இதை சேர்க்கலாம்
3. உயிரற்ற உடல்
4. மனதில் இது வேண்டும்
5. சந்திரனை இவ்வாறு அழைப்பர்
6. பகைவர்கள் கூடித்திட்டமிடுவது.
7. சட்டப் பொருட்களில் ஒன்று
8. விருட்சத்தின் மறு பெயர்

ஜெரோம் ஜூட்சா
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுந்திரைப்படத் திறனாய்வு

## மெய்மையின் ஒரு விடியல்

## காலத்தின் தேவை

சமூகத் தொடர்பு ஆணையம். யாழ் மறைமாவட்டம்

தூய பவுல் ஆண்டின் நிறைவை முன்னிட்டு சமூகத் தொடர்பு ஆணைக் குழுவும் யாழ் மறைக்கல்வி நடு நிலையமும் இணைந்து, இன்றைய காலத்தின் தேவை உணர்ந்து தயாரித்து வெளியிட்டு "மெய்மை யின் ஒரு விடியல்" என்னும் குறும் பட இறுவெட்டு அனைவரும் பார்த்து பயன்பெற வேண்டிய ஒன்றாகும்.

தூய பவுலின் வழியில் பணி வாழ்வில் பயணித்து மறைந்த அருட்பணி சறா அவர்களின் நினை வாக இக்குறும்படம் வெளியிடப்பட்டது.

தூய பவுலின் வாழ்வு வரலாறு மனமாற்றம் இறைபணி என்பவற் றின் ஊடாக சமகாலத் திருச்சபைக்கு அத்தியாவசியமான செய்திகளைக் கூறிநிற்பது இதன் சிறப்பம்சமாகும்.

உதாரணமாக ஆலயப்பங்கு ஒன்றிலே திருவிழா கொண்டாட்ட முறைமைகளைத் தீர்மானிக்கக்கூடும் பங்கு சபையிலே எழுகின்ற பல்வேறு விதமான அதிகாரம் - சாதியம் - விட்டுக்கொடாமை - சுயநலம் போன்ற பிரச்சனைகளைப் படம் போட்டுக் காட்டி தூய பவுலின் மறைபோத னைகளின் ஊடாகவே மனமாற்றம் கொண்டுவர முனைந்திருப்பது. நல்ல முயற்சி "ஓராயிரம் பவுல் வந்தாலும் - 13 அல்ல 13000 கடி தங்கள் எழுதினாலும் முடியாது" என்ற உரை இன்றைய சமூகத்தின் கடினத்தை வெளிக் கொணர்ந்தது.

பவுலின் வரலாற்றுக் காட்சியில் பவுலின் மனமாற்றம், திருச்சங்கக் கூட்டங்கள், போதனைகள் என்பன தத்ரூபமாக இணைக்கப்பட்டுள்ளன.

திருச்சபையில் புற இனத்தா ருக்கும் இடமளிக்கும் வகையில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்திய பவுலின் முன்னோக்கு போதனைக ளையும் வினாக்களையும் காட்டி காலம் - இடம் - தேவை அறிந்து நற்செய்திப்பணி மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியத்தையும் இடித் துரைக்கின்றது.

சாதி - மத - நிற - மொழி வேறு பாடுகளைக் களைந்து ஒரே அணி யில் இணைந்து பவுலின் பாதை யிலே பயணிக்க நம்மை அழைப்ப தாக இக்குறும்படம் அமைந்துள்ளது. பிலிக்ஸ் - தாமஸ் திருமணை முறிவின் ஊடே மனமாற்றத்துக் காக செபித்தல் என்னும் கருத்து காட்டப்படுவதுடன் செபத்தின் வல் லமையும் வலியுறுத்தப்படுகிறது.

துல்லியமான படப்பிடிப்பு

காட்சிக்கான இடத்தேர்வு

இடையிடையே தமிழர் கலை களை மறந்து விடாது கிராமியப் பாடல்கள் காட்சி அமைப்பு படம் பொருந்துகை எல்லாமே சிறப்பாக கையாளப்பட்டுள்ளன. நிறைவில் அருட்தந்தை ஜெயக்கல் சஜேந்திர நாயகம் அவர்களின் குரல் ஒலிக் கும் "வாழ்வது நானல்ல" என்ற பாடல் உள்ளத்தைத் தொட்டு புதிய ஒரு திருப்திகரமான நிறைவைத் தருகிறது.

மொத்தத்தில் சமகால வெ ளியீடுகளின் வளங்களோடு ஒப்பிடு கையில் பெரிதுபடுத்தப்பட முடியாத ஒரு குறைகள் இருப்பினும் இதில் பங்கேற்ற அனைவரும் சிறப்பாக பாராட்டப்பட வேண்டியவர்கள் விசேடமாக அருட்தந்தை ஜோசான் கலாபூசணம் G.P போல் ஆகியோர் இரட்டிப்பு பாராட்டுக்குரியவர்கள்.

செ.அ. அழகராசா

# "உன்னால் முடியும் உன்னால் முடியும் தோழா"

"வெற்றியும் தோல்வியும் உன் எண்ணத்தைப் பொறுத்தது" என்றான். அன்று முடியாது என்ற வார்த்தை முட்டாளின் அகராதியில் தான் என்று முழக்கமிட்ட மாவீரன் நெப்போலியன் உலகத்தில் பிறக் கின்ற ஒவ்வொரு மனிதனும் மாபெரும் சாதனையாளன் பல அற்புதங் களைப் படைக்கும் பிரம்மா யாருமே தங்களைச் சாதாரணமானவர்கள் என்றோ அநாதரவானவர் என்றோ எண்ணிவிடக்கூடாது. மானிடப்பிறவி ஓர் மாபெரும் பொக்கிஷம்.

அப்படியானால் ஏன் எத்த னையோ கோடிக்கணக்கான மனி தர்கள் மிக இழிவான வாழ்வை வாழ்ந்து இறந்து போகிறார்கள்? அதேநேரம் எப்படிப் பல மனிதர்கள் மாமனிதர்களாக விஞ்ஞானிகளாக, அறிஞர்களாக, சாதனையாளர்க ளாக ஆகிறார்கள். அனைத்திற்கும் ஒரே பதில் அவர்களது எண்ணம்.

"எதை நினைக்கிறாயோ அதுவாக மாறிவிடுகிறாய்" என்ற வார்த்தைகளுக்கு சொந்தக்காரன் மகாத்மா காந்தி. எப்பொழுது உயர்ந்தவற்றை எண்ணினார், எதையும் முடியும் என எண்ணினார். உலகம் போற்றும் மகாத்மாவாய் மாறிவிட்டாரே. மாபெரும் சக்தியாய் நின்ற அன்னியனை அவர் மன வலிமை அடிபணிய வைக்க வில்லையா?

அப்படியானால் உயர்ந்த உன்னதமான திட்டங்களை எண்ணிக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா? பல மனிதர்களின் தோல்வியடைந்ததற்குக் காரணமும் இதுதான் செயல்கள். செத்துப்போன உயிரற்ற எண்ணங்களே.

ஆகவே உயர்ந்த திட்டங்க ளோடு உயரிய சிந்தனைகளோடு முடியும் என்று இலட்சியமாய் உறுதி கொண்ட மனம் கொண்டு புறப்ப டுங்கள். பாறைகள் பொடிப்பொடி யாகிப் பாதையாகும். புயல்கள் உங்கள் முன் பூனையாய் பதுங் கும். இறை துணை என்றும் உண்டு. இரும்பென மனதில் உறுதி கொள் ளுங்கள். நாளை உலகின் முதல்வன் நம்பரே திலம் நடக்கும் நன்றே நான் செய்வேன் அதை இன்றே நான் செய்வேன் என இலட்சிய வேட்கை யோடு சொல்லுங்கள். அதை நோக்கிச் செல்லுங்கள். உலகை வெல்லுங்கள்.

சி. அஜந்தன்

புனித மடுத்தீனார் குருமடம்,

யாழ்ப்பாணம்.

# புனித அல்போன்ஸ் மரிய லிகோரியார்



எமது சாவகச்சேரி பங்கின் பாதுகாவலர் இவரேயாவார். இலங் கையிலே இந்தப் புனிதரது ஆலயம் சாவகச்சேரியில் மட்டுமே அமையப் பெற்றுள்ளது.

புனித அல்போன்ஸ் மரிய லிகோரியார் நேப்பிள்ஸ் நகரில் தோன்றியவர். இவர் சட்டக் கலை யில் பயிற்சி பெற்றிருந்தார். அரசி யல் சட்டம், திருச்சபைச்சட்டம் ஆகியவற்றில் முனைவர் பட்டமும் பெற்றிருந்தார். பின் குருத்துவ நிலைக்கு உயர்த்தப்பெற்றார். விரைவில் நேப்பிள்ஸ் நகருக்கில் ஆயராகவும் உயர்வு பெற்றார். பங்குத்தளங்களில் மறைபுரை களைத் தொடர்ந்து நடத்தி மக் களை நல்வழிப்படுத்தும் பணிக் கென இரட்சகர்சபை ஒன்றை துறவி களுக்காக நிறுவினார். இவை படித் தவை, எழுதியவை அனைத்தும் எளிய மக்களும் எளிதில் புரிந்து ஆன்மீக முன்னேற்றம் காணவேண்டு மென்ற குறிக்கோளைக் கொண்டி ருந்தன. ஆகவே இவர் எழுதிய நூல்களின் காரணமாக "அறநூக் கக்கலை" என்ற துறையில் "வல்லுனர்" என்ற பெயரும் இவர் பெற்றுள்ளார். ஆயராக நியமனம் பெற்ற இவர் விரைவில் இப்பதவி யிலிருந்து விடுதலை அடைந்து மீண்டும் தனது சபைக்கே போய்ச் சேர்ந்தார். "மரியாயின் பெருமை", திவ்வியநற்கருணை சந்திப்பு" "சிலுவைப்பாதை" ஆகிய நூல்க ளில் இவரின் ஆன்மீக சிந்தனை கள் வெளிப்பாகின்றன. இந் நூல்க ளின் காரணமாக இவருக்கு "மறை வல்லுனர்" என்ற பட்டமும் அளிக் கப்பட்டுள்ளது. 26 ஆண்டளவாக நேப்பிள்ஸ் நாடு முழுவதிலும் பயணங்களை மேற்கொண்டு மறையுரை வழியாக பல நன்மை களைப் புரிந்தார்.

இவரது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இவருக்கு பெரியதொரு சிலுவை காத்துக் கொண்டிருந்தது. நேப்பிள் நாட்டின் அரசன் இவரது துறவற சபை ஒழுங்குகளை அங்கீ கரிப்பதில் காலம் கடத்தினான். இந் தச் சபை எந்தச் சொத்தின்மீதும் உரிமை கொண்டாடக் கூடாது என்ற நிபந்தனையை ஏற்க அரசன் கட் டளையிட்டான். புனிதர் தன் ஒப்பு தலைத் தெரிவித்தார். ஆனால் அரண்மனையில் பணியாற்றிய ஓர் உயர் அலுவலர் எவருக்கும் தெரி யாமல் இச்சட்டத்தின் நிபந்த னையை மாற்றி விட்டார் புனிதர் தன் பார்வையிழந்த நிலையில் முதியவராகவும் இருந்தார். எது வுமே அறியாதவராகக் கையெழுத் திட்டார். இதனால் நாம் சிக்கலில் அகப்படுவோம் என்பதை அப்போது இவர் உணரவில்லை. உடனே சபையில் பிளவு ஏற்பட்டது. நேப்பிள்ஸ் ஐச் சேர்ந்தவர்கள் இவருடன் தொடர்பு கொள்வதை திருத்தந்தை நிறுத்தினார்.

தமக்கு அருகில் இருந்த மற் றப் பகுதியினர் வழக்கம் போல் தங்கள் அலுவல்களைச் செய்ய இவர் இசைந்தார். ஆனால் இப் பிளவு இவர் இறந்த பின்னரே சரி யாக்கப்பட்டது. இறப்பதற்கு முன் பார்வையிழந்தவராய் இன்னும் பல நோய் களால் தாக்கப்பட்டு வேத னைகளை அனுபவித்தார். இரட்சகர் சபையை நிறுவிய இவரையே சபையிலிருந்து இவரது 83ஆவது வயது வரை நீக்கி வைத்த கொடுமை சூழ்ச்சியின் காரணமாக நிகழ்ந்தது என்பதை நினைக்கும் போது சாத்தான் தூங்குவதில்லை என்பதை உணரலாம்.

வி. வின்றா சாந்தினி

சாவகச்சேரிப் பங்கு.


# 2 வது ஆண்டு நினைவு



அருட்பணி. வஸ்தியாம்பிள்ளை பொனிபஸ்

மண்ணில் 1947.05.14 விண்ணில் 2007.08.26

குருப்பத்தின் ஒளி விளக்கே
மருத்துவத்தின் குலவிளக்கே
உன் பிரிவைத் தாங்காது
தவிக்கின்றோம் உறவுகள் நாம்


இறைமக்கள் இயேசுவின்
உன்னத பணியை நிறைவு
-ஆற்றினாய்
உன் பணியில் கனிகளை வைக்க

காலமெல்லாம் புற்றுநோயாய்
வந்தாயோ!
எத்தனையோ பேரை நீ தொட்டுக்
குணமாக்கினாய் உன் நோயை
மாற்ற முடியவில்லையே!
உன் ஆன்மா சாந்தியடைய
ஜெபிக்கின்றோம் உறவுகள்.

தாய், சகோதரர்கள், மைத்துனர்,
மைத்துனிமார் மருமக்கள்,
உற்றார் உறவினர் நண்பர்கள்.

(Advt 62/ 09)


# தூய கன்னிமரியாளின் விண்ணேற்புப் பெருவிழா ஆவணி 15



அன்றைய தினம் கடன்திருநாளாக அனுஷ் டிக்கப்படும். யாழ். மன்னார் மறைமாவட்டங்களில் அன்னையின் பெருவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுவதற்கு ஆயத்த வழிபாடுகளை பங்குத்தந்தையர்கள் ஒழுங்குபடுத்தி நடாத்துகின் றனர். நமது நாட்டில் அமைதியும், நீதியோடு கூடிய சமாதானமும் இடம் பெயர்ந்த மக்களின் நிரந் தர அமைதிக்கும் அன்னையினுடைய பரிந்துரையை தொடர்ந்து வேண்டுவோம்.

அன்றைய நாளுக்குரிய இறைவார்த்தை

| | |
|---|---|
| திரு.வெ. | 11:19a,12:1-6, 10ab |
| தி.பா. | 45:9-11,15 பல்லவி 9b |
| 2ம் வாசகம். | 1கொரி 15:20-26 வரை |
| நற்செய்தி. | லூக் 1:39- 56வரை |


# நெடுந்தீவு - முகிலனின் கதை நூல்களின் வெளியீட்டு விழா

"கனவுகளின் வாசகன்" (3வது தொகுப்பு) "அகதியின் முகம்" (4வது தொகுப்பு)

காலம் :- 16.08.2009 (ஞாயிறு)
நேரம் :- காலை 09.30 மணி
இடம் :- யாழ். நாவலர் கலாச்சார மண்டபம்.



# 11ம் வருட நினைவஞ்சலி

திரு. சுவாம்பிள்ளை பற்றிக்



மண்ணில் 10.10.1924
விண்ணில் 25.08.1998

இதயக் கோயிலில்
இன்னமும் குடியிருக்கும்
இனிய தெய்வமே - ஐயா
பதினொரு ஆண்டுகள் ஆனதையா
உனைப் பிரிந்து - ஆனாலும்
உன் அன்பின் புன்னகை
எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்
ஆண்டவனில் இளைப்பாற
அனுதினமும் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர்.

1/14 1ம் ஒழுங்கை
கொம்பாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(Advt 59/09)



# 10 ம் ஆண்டு நினைவஞ்சலி

தொம்மைப் பிள்ளை அருளப்பு



மண்ணில் 15.07.1923
விண்ணில் 23.08.1999

அன்பான அப்பா, நீங்கள் எங்களை
விட்டுப் பிரிந்து பத்து ஆண்டுகள்
ஆனாலும் இன்றும் நீங்கள் எம் அருகில்
இருப்பதாகவே உணர்கின்றோம்.
ஏனெனில் நீங்கள் எம்மீது பொழிந்த
அன்பும் பாசமும் மிக மிகப் பெரிது.

நீங்கள் என்றும் இறைவனின் வான்வீட்டில்
மகிழ்ந்திருக்க உங்களுக்காக செபிக்கின்றோம்

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

சில்லாலை, தெற்கு
பண்டத்தரிப்பு.

(Advt 61/ 09)


# இரகசியம்

## பங்குத் தந்தைக்குத் தொலைபேசி

பங்கு குரு : ஹலோ! யாரு!

ஒருவர் : நான் தான் சாமி, அந் தோனி, தயவு செய்து இன்னைக்கு காலையில வைச்ச பிரசங்கத்தை திரும்ப ஒருமுறை சொல்லுங்க சாமி.

குரு : பரவாயில்லையே, இரவுல கூட என்னுடைய பிரசங்கத்தைக் கேட்க ஆசைப்படுறியே.

ஒருவர் : வேறொன்றுமில்ல, தூக்கம் வரல. அதான் நீங்க பிர சங்கம் வச்சா தானா தூக்கம் வந்துடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பறைகளிலிருந்து திருச்சபையின் போதனைகளை பாதுகாத்தவர் புனித அகுஸ்தீனாரே

– அருட் சகோ. றமேஸ் அ.ம.தி –

மேலைநாட்டு பிதாக்களில் அதி சிறந்தவராக கருதப்படும் புனித அகுஸ்தீனார் திருச்சபையின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பேதகர்களின் தப்பறைகளிலிருந்து பாதுகாத்து அவர்களால் திருச்சபை மீது ஏவப்பட்ட கேள்விக் கணைகளுக்கு சரியான பதில் கொடுத்து திருச்சபையின் படிப்பினைகளுக்கு புத்துயிரைக் கொடுத்தவர் என்ற பெருமைக்குரியவர் என்றால் மிகையாகாது. கி.பி 354 இல் ஒரு அஞ்ஞான நிலப்பிரபுவுக்கு மகனாக பிறந்த இவர் சிறுவயதிலே கேளிக்கைகளிலும், ஒழுக்கக்கேடான வாழ்க்கை முறையிலும், சிற்றின்பத்திலும் தன் வாழ்வைக் கழித்தார். தன் வாழ்வில் ஓர் அர்த்தம் கண்டுபிடிக்க ஆசைப்பட்ட புனித அகுஸ்தீனார் கி.பி 373 இல் சிசரோவின் நூலினைப் படித்த பின்பு தனது வாழ்வில் சிற்றின்ப கேளிக்கைகளைத் துறந்து மனிக்கேயர் பேதகத்தில் ஓர் மாணவரானார். தத்துவப் படிப்புகளில் இவர் கொண்ட ஆர்வம் இவரை புதுப் பிளற்றோனிக் தப்பறைகளுக்கு இட்டுச் சென்றாலும் தனது வாழ்வில் ஏற்பட்ட சந்தேகங்களுக்கும், வினாக்களுக்கும் இவரால் அர்த்தம் காண முடியவில்லை.

மிலானில் தனது வாழ்வை அமைத்த காலத்தில் புனித அகுஸ்தீனாரது வாழ்வில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. புனித அம்புறோசியாரின் தனிப்பட்ட செல்வாக்கைப் பெற்றுக் கொண்ட இவர் அவரது போதனைகளால் பெரிதும் கவரப்பட்டதுமல்லாது, நீண்ட காலமாக விடை காணாத இவரது சந்தேகங்களுக்கும் வினாக்களுக்கும் திருப்தியான பதிலைப் பெற்று வாழ்வில் ஓர் புதிய பரிணாமம் பிறக்க புதிய மனிதனாக தன்னில் தன்னைக் கண்டார். இவை அனைத்திற்கும் முக்கிய காரணம் இவரது தாயார். தேவ பயமும் பண்பும் பக்தியும் நிறைந்து விளங்கிய புனித மொனிக்கம்மாள் அஞ்ஞானியாக விளங்கிய தனது கணவனை மட்டுமல்ல, ஊதாரியாக திரிந்த தனது மகனையும் தனது வல்லமை நிறைந்த செபத்தினால் இறைவன் பாதம் கொண்டு வந்தாள் என்பதே உண்மை. கி.பி 387 இல் திருமுழுக்குப் பெற்ற அகுஸ்தீனார் கி.பி 391 இல் கிப்போவில் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டு பின்னர் அந்நகரில் பேராயரானார்.

புனித அகுஸ்தீனார் தனது பணிக்காலத்தில் டொனற்றிசம், பெலாஜினிசம், மனிக்கேயிசம் போன்ற பேதகங்களை எதிர்த்துப் போரடி திருச்சபையின் படிப்பினைகளுக்கு புத்துயிரளித்தார். கிறிஸ்துவியல் பற்றி பேசிய இப்பேதகங்கள் திருச்சபையின் தலைவரும் கிறிஸ்தவ விசுவாசத்தின் உயிர் நாடியுமான இறைமகன் கிறிஸ்துவின் மனித தெய்வீகத் தன்மைகளைப் பற்றிய தப்பறைகளை மக்களுக்கு போதித்து, திருச்சபையின் படிப்பினைகளுக்கு எதிராக மக்களை குழப்பிவிட்டன. இதனால் கிறிஸ்தவ விசுவாசத்தில் திருச்சபையின் போதனைகளிலும், பேதகர்களின் தப்பறைகளிலும் ஓர் முரண்பட்ட நிலையைக் கண்ட மக்கள் தங்கள் விசுவாச சத்தியங்களில் தளம்பினார்கள். இத்தகைய இக்கட்டான காலகட்டத்தில் புனித அகுஸ்தீனார் தனது மறையுரைகளாலும், திருமுகங்கள் மூலமாகவும் மக்களுக்கு உண்மைத் தன்மையை விளக்கியது மட்டுமல்லாது அவர் எழுதிய நூல்களின் மூலமாக பேதகர்களின் வினாக்களுக்கு விடையளித்து, மக்களின் சந்தேகங்களைப் போக்கி, திருச்சபையின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு சரியான விளக்கத்தை கொடுத்து, திருச்சபைக்கு எதிரான பெரும் சவால்களில் இருந்து இதனைக் காத்து, மக்களின் விசுவாசக் கண்களைத் திறந்து வைத்தது மட்டுமல்லாது இன்றும் எம்மெல்லோருக்கும் ஓர் முன்மாதிரியாக காட்சி தருகின்றார்.

இன்று நாம் வாழும் இக்காலத்தில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து, நாகரீக மேம்பாட்டில் தொழிநுட்ப விருத்தியால் சாதனை படைக்கும் மனிதன் கடவுள் சார்ந்த விடையங்களில் தன் இருப்பை மறுத்து உலகியல் வாழ்வை நோக்கி பயணிப்பது கண்கூடு. இதனால் அறிவுபடைத்தவர்களும், தங்கள் செல்வாக்கைப் பரப்ப விரும்புபவர்களும், அரசியல்வாதிகளும் தமக்கு ஏற்ற வகையில் சட்டங்களை வகுத்து, போதனைகளை மாற்றி, சுயலாப நோக்கில் திருச்சபைக்கு எதிராகவும் அதன் விசுவாசத்திற்கு எதிராகவும் பல தப்பறைகளை பிறப்பித்து செயற்படுவது எம்மால் கண்டுணரப்படுகிறது. கிறிஸ்துவை முன்னுதாரணமாகக் கொண்டு வாழும் எம் திருச்சபைச்சபையின் போதனைகளுக்கு எதிராக செயற்படும் தீய சக்திகளில் இருந்து கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாக்க புனித அகுஸ்தீனாரை முன்னுதாரணமாகக் கொண்டு வாழ இன்றே புறப்படுவோம். நல்ல கிறிஸ்தவ விழுமியங்களின்படி வாழ்ந்து எமது வாழ்வால் கிறிஸ்துவுக்கு சாட்சியாவோம்.

# சின்னமடு அன்னையின் வருடாந்த பெருவிழா

யாழ் மறைமாவட்ட யாத்திரைத் ஸ்தலங்களில் ஒன்றாகிய சின்னமடு அன்னையின் வருடாந்த விழா ஆவணி 5ம் திகதி மிகவும் சிறப்பாகவும், பக்தியுணர்வுடனும் கொண்டாடப்பட்டது. மக்கள் யாழ் குடாநாட்டின் பல இடங்களிலுமிருந்து பெருந் தொகையான எண்ணிக்கைகளில் ஒன்று கூடினார்கள். நவநாள் வழிபாட்டிலும் பலர் பங்கெடுத்தது குறிப்பிடத்தக்கது. திருநாள் திருப்பலி அருட்பணி அன்ரனிதாஸ் அடிகளின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. ஏராளமான குருக்கள் கன்னியர்கள், பெரிய குருமட மாணவர்கள் பெருவிழாவில் பங்கெடுத்தார்கள். நீண்டகாலத்திற்கு பின்பு பெருந்திரளான பக்தர்கள் இவ்வருடம் அங்கு வந்ததை காணக்கூடியதாக இருந்தது. அன்னையுடைய திருச்சுருப பவனி மிகவும் செப உணர்வுடனும், பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை சொல்லி ஆறுதல் அடைவதையும் உணரக்கூடியதாய் இருந்தது.

அன்னையின் பிரியாவிடை செபம் செபிக்கும் போது இறைமக்கள் பலர் கண்ணீர் மல்க அழுதவண்ணம் தாயிடம் வேண்டிக் கொண்டது அனைவரின் உள்ளத்தையும் ஓர் தடவை உருகவைத்தது.

சின்னமடு பரிபாலர் அருட்பணி அருள்தாஸ் திருவழிபாடு, பொது ஒழுங்குகள், யாவற்றையும் நெறிப்படுத்தினார். மக்கள் இலகுவாக போக்குவரத்தை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டு இருந்தன.

**"அன்னையின் பிள்ளை ஒரு போதும் அழிவதில்லை"**

# எங்கள் மீதான திருத்தந்தையின் கரிசனை

இலங்கையில் சமாதானமும், நல்லிணக்கமும் உருவாக நான் செபிக்கிறேன். மோதலிலே சிக்குண்டு உயிரிழந்த ஆயிரக்கணக்கான சிறுவர்கள், பெண்கள், மற்றும் வயோதிபர்களின் ஆன்ம சாந்திக்காகப் இறைவனைப்பிரார்த்திக்கின்றேன். வத்திக்கான் பேதுருசதுக்கத்தில் நடைபெற்ற செபக் கூட்டத்தில் உரையாற்றும் போது திருத்தந்தை அவர்கள் இவ்வாறு தெரிவித்தார். மேலும் இலங்கையில் போர்ச்சூழலில் இருந்து வெளியேறிய மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களின் நலன்களை உடனடியாக பேணுமாறு வேண்டுகோள் விடுத்த திருத்தந்தை அவர்கள் எமது இலங்கைநாட்டினை அனைவராலும் அன்பு செய்யப்பட்டு வணங்கப்படும் மடு அன்னையின் தாய்மை நிறை பாதுகாவலில் ஒப்புக் கொடுத்து செபித்துள்ளார்.

# இவ்வருடத்திற்கான மடு யாத்திரைக்கான போக்குவரத்து ஒழுங்குகள்

இம்முறை மடு தேவாலய விழாவையொட்டி யாழ் ஆயாரின் வேண்டுதலுக்கு ஏற்ப யாழ் பக்தர்களும் பங்குபெறும் பொருட்டு பயண ஒழுங்குகள் யாழ் அரச அதிபர் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. இம்மாதம் 13ம் திகதி 150 பேர் இப் பயணத்தில் நேரடியாக யாழ்ப்பாணத்தில் இருந்து மடுவுக்கு சென்று 16ம் திகதி மீண்டும் நேரடியாக மடுவில் இருந்து யாழ் வர பய்ண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

Governor ஜெனரல் சந்திரசிறி, மேஜர் சமந்த, யாழ் சிவில் அலுவலகம், யாழ் அரச அதிபர் கணேஷ் இவற்றுக்கு உதவி புரிந்தனர்.

**அருட்பணி.**
**இ.ஜீ. விஜின்ரஸ்.**

# சொந்த மண்ணில் அகதிகளாய்...

ஒவ்வொரு மனிதனும் இறைவனால் சுதந்திரமாக படைக்கப்பட்டுள்ளான். தான் விரும்பிய இடத்திலே வாழுவதும் தான் விரும்பியதைப் பின்பற்றுவதும் அவனின் அடிப்படையான உரிமைகளாகும். இதிலும் குறிப்பாக சிறுவர், பெண்கள், வயோதிபர், அப்பாவி பொது மக்கள் போன்றோர் சமூதாயத்திலே அக்கறையுடனும் பாதுகாப்புடனும் பேணப்பட வேண்டியவர்கள். அவர்கள் எம் நாட்டின் கொடிய போரின் விளைவாக மாண்டவர்கள், சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், மன நிலை பாதிக்கப்பட்டவர்கள், அநாதைகள் என வாழ்வினை இழந்தவர்களின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. அந்த வகையிலே இந்நாட்களிலே புதிதாக ஒரு வகையினர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள்தான் இடைத் தங்கல் முகாம்களிலே சிறை வைக்கப்பட்டுள்ள இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்கள்.

போரின் வடுக்கள் இன்னும் ஆறாமல் மன, உள நெருக்கீடுகள் வாழ்வினை சின்னாபின்னமாக்க முகாம்களிலே காரணமின்றி விசாரணைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் சொந்த மண்ணிலே அகதிகளாக்கப்பட்ட ஏதிலிகளாவர். 'கரித்தாஸ்' போன்ற பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்கள் ஆழமான பணியினை அகட்டிச் சென்றாலும் இவர்களின் மனத்திற்கு விடுதலையினை யாரால் கொடுக்க முடியும். கடைசியிலே பொருட்கள் வாங்குவதற்குக்கூட இவர்கள் வருத்தப்பட்டு வைத்திய சாலைக்கு வந்தால்தான் இயலும் எனும் நிலையினை எண்ணும் போது மனிதத்தின் மரணிப்பு எமக்கு புலனாகின்றது.

கிறிஸ்தவர்களாகிய நாம் நீதிக்காக குரல் கொடுக்க வேண்டியவர்கள். சமூகத்தின் இரும்புக் கதவுகளால் நாம் மௌனிகளாக்கப் பட்டாலும் எம் மக்களுக்காய் இறைவனிடம் நீதி கேட்போம். எம் உறவுகள் மீண்டும் தமது சொந்த இடம் திரும்பி அமைதியாகவும், மகிழ்வாகவும் வாழ இறைவனிடம் உருக்கமாகப் பிராத்திப்பது எம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

**நன்றி உறவுகள்.**
**சுருக்கம்**
**அருட்சகோ. எல்மோ.**

# மடுத்திருத்தலத்தில் இருந்து மன்னார் குருமுதல்வர் விக்டர் சோசை...

மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி. விக்டர் சோசை அடிகளார் பாதுகாவலன் பத்திரிகைக்கு இவ்வருட விழாபற்றி அளித்த செவ்வியில் 12ம் திகதி முதல் யாத்திரையினர் அனைவரும் தங்குவதற்காக அனுமதி பெற்றுள்ளனர். அன்றையதினம் இருபதினாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வருகைதந்ததாகவும், திருத்தலத்தில் ஒரு கிலோமீற்றருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்துக்கு அப்பாலும் சென்று மக்கள் விடுதிகள் அமைத்து தங்கியுள்ளனர். மடுப்பரிபாலகர் வழமையான வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்துள்ளார். இருப்பினும் தண்ணீர் வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மக்கள் பாவனைக்கு உள்ளது. உணவு, மற்றும ஏனைய பொருட்கள் இலகுவாக பெற்றுக் கொள்வதற்கு வழி செய் யப்பட்டுள்ளது. மன்னார் அரச திணைக்களங்கள் அனைத்தும் முழுமையான சேவையை வழங்குகின்றன. தென் பகுதியிலிருந்து மூன்று அமைச்சர்கள் இவ்விழாவில் கலந்து கொள்ள வந்துள்ளனர். குறிப்பாக தென்பகுதியில் இருந்து கணிசமான தொகையினர் இவ்விழாவிற்கு வருகை தந்ததை காணக் கூடியதாக உள்ளது. ஆகஸ்ட் 15ம் திகதி திருநாள் திருப்பலியை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, கொழும்பு புதிய பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இளைப்பாறிய பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை, மற்றும் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசவ் ஆண்டகை ஆகியோர் திருவிழாத் திருப்பலி யினை ஒப்புக் கொடுக்கவுள்ளனர்.

## கைதடி இடம்பெயர்ந்தோர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)


தினம் காலை 7.30 மணிக்கு முல்லைத்தீவுப் பங்குத் திருச்சபையினர் தங்கள் பாதுகாவலர் புனித இராயப்பரின் திருவிழாவையும் கொண்டாடி மகிழ்ந்தனர். விசுவாசப் பாறையாகிய புனித பேதுறுவானவரின் தலைமையின் கீழ் அடித்தளமிட்டுக் கட்டப்பட்ட திருச்சபையின் வாரிசுகளாகிய நாங்கள் கத்தோலிக்க திருச்சபையின் விசுவாசத்தைப் பேணிப் பாதுகாத்து எதிர்நோக்கும் சவால்களை விசுவாச வாழ்வால் எதிர்கொண்டு புனிதரின் வழியில் யேசுவின் சாட்சிகளாய் வாழ வேண்டுமென அருட்தந்தை தனது மறையுரையில் கேட்டுக்கொண்டார். ஈற்றில் அருட்தந்தையவர்கள் தனது நன்றியுரையில் இவ்வாலயம் அமைய பலவழிகளிலும் பாடுபட்டு உழைத்த நலன்புரி நிலையங்களின் ஆன்மீகக் குருவும் யாழ் மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குனருமான அருட்பணி அன்ரன் ஜோர்ஜ் அவர்களையும் மற்றும் உதவிகள் புரிந்த சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர், கிராம சேவை அலுவலர்கள், மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

**செல்வி. மேரி தர்ஷினி,**
**மறையாசிரியர், செம்பியன்பற்று.**

# பாடசாலைகளில்...

## புனித பத்திரிசியார் கல்லூரி பரியோவான் கல்லூரியை 282 ஓட்டங்களால் வென்றது

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெற் சங்க ஏற்பாட்டில் யாழ் பாடசாலைகள் கிரிக்கட் சங்கத்தினால் யாழ் மாவட்ட பாடசாலைகளின் 15 வயது பிரிவினருக்கு இடையே நடத்தப்பட்டு 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கட் போட்டி ஆட்டமொன்றிலேயே இவ் வெற்றியினை புனித பத்திரிசியார் கல்லூரி பெற்றுக்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய புனித பத்திரிசியார் அணி 50 ஓவர்களில் 07 விக்கட்டுக்களை இழந்து 359 ஓட்டங்களைப் பெற்று 360 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய பரியோவான் அணி 27.3 ஓவர்களில் அணைத்து விக்கட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.



மாகாணப் போட்டியில் 15 பதக்கங்களை வென்ற இளவாலை கன்னியர் மடம்.



கரம்பன் சிறிய புஸ்பம் மகளீர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில்...



யாழ் மலரும் பூக்கள் அபிவிருத்திச் சங்க விளையாட்டு விழாவில் ...

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org